பக்கங்கள் : பன்னிரண்டு

Registered as a Newspaper

உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 சித்திரை 31 ஞாயிற்றுக்கிழமை (14.05.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :168

அல்லைப்பிட்டியில் நேற்றிரவு அசம்பாவிதம்; நான்கிற்கும் மேற்பட்டோர் பலியென அச்சம்!

காயமடைந்த மூவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதி

யாழ்ப்பாணம்,மே14

அல்லைப்பிட்டி 2ஆம் வட்டாரத்தில் நேற்றிரவு 9 மணியளவில் இடம்பெற்ற சூட்டுச் சம்பவத்தில் நான்கிற்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டனர்; மூவர் காயமடைந்தனர்.

இந்தப் பகுதியில் குண்டுவெடிப்புச் சத்தம் கேட்டதாகவும் -

அதனைத் தொடர்ந்து சரமாரியாக துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் கேட்டதாகவும் - கூறப்படுகிறது.

இச்சம்வத்தில் பொதுமக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என வெளியான தகவலை அடுத்து ஊர்காவற்றுறை நீதிவானின் பணிப்பின் பேரில் ஊர்காவற்றுறை வைத்திய சாலை அம்புலன்ஸ் சம்பவ இடத்துக்குச் சென்றது. அங்கு காமடைந்தவர்கள் இல்லாததால் அம்புலன்ஸ் வண்டி திரும்பிச் சென்றது.

அம்புலன்ஸ் வண்டிச் சாரதியின் மூலம் 4 பொதுமக்கள் உயிரிழந்தனர் என்ற தகவல் நீதிவானுக்குத் தெரியப்படுத்தப்பட்டது.

நீதிவான் இன்று காலை சம்பவ இடத்தில் விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளார்.

இதற்கிடையில் இச்சம்பவத்தில் காயமடைந்தவர்கள் என்று கூறப்படும் மூவரை அப்பகுதி பங்குத் தந்தை ஒருவர் எடுத்து வந்து யாழ். ஆஸ்பத்திரியில் சேர்த்துள்ளார். அல்லைப்பிட்டி வடக்கு வாசிகளான எஸ்.மோகனாம்பிகை(வயது 46), ப.செல்லத்துரை (வயது 67), எஸ்.சிவநேசன் (வயது 46) ஆகியோரே யாழ். ஆஸ் பத்திரியில் நேற்றிவு சேர்க்கப்பட்டுள்ளவர்களாவர்.

இதேவேளை நாரந்தனைப் பகுதியிலும் நேற்றிரவு சரமாரியாகத் துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்டன என்று அங்கிருந்து வந்த தகவல்கள் தெரிவித்தன.

(22)

கடலில் பணியை தற்காலிகமாக கைவிடுகிறது கண்காணிப்புக் குழு

பாதுகாப்புக் கருதியே இம்முடிவு என்று கூறுகின்றார் பேச்சாளர்

கொழும்பு,மே14

தாம் மேற்கொண்டு வந்த கடல் கண்காணிப்புப் பணிகளை தற்காலிகமாக இடை நிறுத்துவதென இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு முடிவுசெய்துள்ளது. கண்காணிப்புக் குழு உறுப்பினர்களின் பாதுகாப்புக் கருதியே இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. கண்காணிப்புக் குழுவின் பதில் பேச்சாளர் றொபேட் நில்சன் இத்தகவலை ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்.

யுத்தநிறுத்த உடன்படிக்கையின் கீழ் படையினர் மற்றும் விடுதலைப் புலிகள் கடல் பயணங்களை மேற்கொள்வதற்கு யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுவினர் வழித்துணை வழங்கியிருந்தனர்.

யுத்தநிறுத்த உடன்பாடு நடைமுறைக்கு வந்த சமயம் இத்தகைய வழித்துணை விடுதலைப் புலிகளின் கடற்கலங்களுக்கும் வழங்கப்பட்டு வந்தன. பின்னர் அது நிறுத்தப்பட்டிருந்தது.

எனினும் கிழக்குத் தளபதிகள், போராளிகள் அவர்களது தலைமையுடன் கலந்துரையாட வன்னி வந்து திரும்ப தனியார் கப்பல் ஒன்றில் தமது வழித்துணையை கடந்த

(12ஆம் பக்கம் பார்க்க)

திருநெல்வேலியில் கிரனேட் வீச்சு!

யாழ்ப்பாணம்,மே14

திருநெல்வேலியில் தபால் பெட்டிச் சந்தியில் நேற்றிரவு 7.25 மணியளவில் படையினரை இலக்குவைத்து கிரனேட் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் அங்கு பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த படையினரில் மூவர் காயமடைந்தனர். இதனையடுத்து படையினர் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தனர்.

இந்த அசம்பாவிதத்தில் தபால்பெட்டி ஒழுங்கையைச் சேர்ந்த எம்.சடாட்சரம் (வயது59) என்பவர் காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டார்.

இதேவேளை, இக்கிரனேட் தாக்குதலுக்கு பொங்கி எழும் தமிழீழ மாணவர் படை உரிமைகோரியுள்ளதாக இணையத் தளச்

(12ஆம் பக்கம் பார்க்க)

சுண்டிக்குளியில் நேற்றுக் காலை துப்பாக்கிச் சூட்டில் சிப்பாய் பலி!

வலி.வடக்கு, மே14

சுண்டிக்குளி விதானையார் வீதியில் நேற்று படையினர் மீது இனந்தெரியாதவர்கள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார்.

காலை 8.20 மணியளவில் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த படையினரை இலக்கு வைத்து துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. இதில் படுகாயமடைந்த டபிள்யூ. எஸ். திஸாநாயக்க (வயது 26) என்ற சிப்பாய் பின்னர் உயிரிழந்தார்.

இச்சம்பவத்தின் பின்னர் அப்பகுதியில் இராணுவத்தினர் குவிக்கப்பட்டனர். தேடுதலும் நடத்தப்பட்டது.

யாழ். நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் சம்பவ இடத்தை பார்வையிட்டு, வாக்கு மூலங்களைப் பதிவு செய்தார்.

பின்னர் யாழ். நகரில் உள்ள 51 ஆவது படைப் பிரிவின் அலுவலகத்தில் வைக்கப்பட்டிருந்த சிப்பாயின் சடலத்தையும் பார்வையிட்டு, உறவினர்களிடம் சடலத்தை கையளிக்க உத்தரவிட்டார். (86-190)

கஜேந்திரன் எம்.பி அலுவலகமும் மாணவர் பேரவையும் தீக்கிரை

வலி.வடக்கு, மே14

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை அலுவலகமும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரனின் குறைகேள் பணிமனையும் நேற்றுமுன்தினம் நள்ளிரவு தீக்கிரையாக்கப்பட்டன.

பரமேஸ்வராச் சந்தியில் உள்ள இரண்டு மாடிக் கட்டடத்தில் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை இயங்கி வருகிறது. இக்கட்டடத்தின் ஒரு பகுதியில் நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரனின் மக்கள் குறை கேட்கும் பணிமனை அமைந்துள்ளது.

நேற்றுமுன்தினம் நள்ளிரவு 11.45 மணியளவில் மோட்டார் சைக்கிள்களில் வந்த சிலர் இக்கட்டடத்துக்குள் புகுந்து தொலை

(12ஆம் பக்கம் பார்க்க)

முன்னரங்க நிலை மீது நேற்றுத் தாக்குதல்: 2 சிப்பாய்கள் பலி!

வவுனியாவில் ஓமந்தை முன்னரங்க காவலரணில் பணியில் இருந்த படையினர் மீது நேற்று முற்பகல் 11.30 மணியளவில் தாக்குதல் ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இத்தாக்குதலில் 2 சிப்பாய்கள் கொல்லப்பட்டனர். அவர்களது சடலங்கள் வவுனியா ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளன.

சம்பவ இடத்துக்கு சென்ற வவுனியா நீதிவான் எம். இளஞ்செழியன் விசாரணைகளை மேற்கொண்டார்.

இன்று ஹர்த்தால் அனுஷ்டிக்க அழைப்பு

யாழ்ப்பாணம்,மே14

சர்வதேச மாணவர் பேரவை அலுவலகம், நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.கஜேந்திரனின் அலுவலகம் ஆகியவை நேற்றுமுன்தினம் இரவு எரியூட்டப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து இன்று பூரண ஹர்த்தால் மேற்கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

உயர் கல்வி நிறுவனங்களின் மாணவர் அமையத்தின் யாழ்.மாவட்ட பிரிவு இந்த அழைப்பை விடுத்துள்ளது.

இதுதொடர்பாக விடுக்கப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

சிறீலங்கா படைகளினால் மாணவர் பேரவை அலுவலகமும் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.கஜேந்திரனின் அலுவலகமும் நேற்றுமுன்தினம் நள்ளிரவு தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. சிறிலங்காப் படைகளின் இந்த அராஜகத்தை கண்டித்து இன்று பூரண ஹர்த்தால் கடைப்பிடிக்குமாறு வேண்டுகோள் விடுக்கின்றோம்.

யாழ்.பொது நூலகத்தை 1982ஆம் ஆண்டு தீயிட்ட சிறீலங்கா கைக்கூலிகள் மாணவர்களின் கல்வியில் அக்கறை கொண்டு செயற்

(12ஆம் பக்கம் பார்க்க)

இலங்கை நிலைமை தொடர்பாக ஐ.நா. செயலாளர் நாயகம் கவலை

இலங்கையில் அண்மையில் நடந்துள்ள கடல் மற்றும் விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல்கள் குறித்து ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் கோபி அனான் கவலை தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கையில் பாரிய கடல் மற்றும் விமானத் தாக்குதல்கள் கடற்படையினர் மற்றும்

(12ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தமிழக முதல்வராக கருணாநிதி பதவியேற்றார் 30 அமைச்சர்களும் நேற்று சத்தியப்பிரமாணம்!

தமிழகத்தில் முதல்வராக தி.மு.க. தலைவர் கலைஞர் மு.கருணாநிதி நேற்றுப் பதவிப் பிரமாணம் செய்துகொண்டார். அவரைத் தொடர்ந்து அவரது அமைச்சரவையும் பதவியேற்றது.

சென்னையிலுள்ள நேரு ஸ்ரேடியத்தில் நேற்று முற்பகல் 11 மணிக்கு பதவியேற்பு வைபவம் மிகவும் கோலாகலமாக நடைபெற்றது. தமிழக ஆளுநர் சுர்ஜித்சிங் பர்னாலா முதல்வருக்கும் அமைச்சர்களுக்கும் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

காலை 9.15 மணியளவில் வீட்டில் இருந்து கருணாநிதி புறப்பட்டார். முதலில் அவர் வேப்பேரி பெரியார் திடலுக்குச் சென்று பெரியார் நினைவிடத்தில் மரியாதை செலுத்தினார்.

பிறகு மெரீனா கடற்கரைக்குச் சென்று அண்ணா நினைவிடத்தில் மலர் வளையம் வைத்து வணங்கினார். அதைத் தொடர்ந்து கிண்டி சென்று பெருந்தலைவர் காமராஜர் நினைவு மண்டபத்தில் மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்தினார்.

தலைவர்களின் நினைவிடங்களில் மரியாதை செலுத்திய பிறகு நேரு ஸ்ரேடியத்துக்கு கருணாநிதி சென்றார். அங்கு அவருக்கு அதிகாரிகளும், தி.மு.க. நிர்வாகிகளும் உற்சாக வரவேற்புக்கொடுத்தனர்.

11 மணிக்கு புதிய அமைச்சரவை பதவி ஏற்பு விழா தொடங்கியது.



கலைஞருக்கு ஆளுநர் பர்னாலா பதவிப் பிரமாணம் செய்து வைக்கிறார்.

முதலில் முதலமைச்சராகக் கருணாநிதி பதவி ஏற்றார். அவருக்கு ஆளுநர் பர்னாலா பதவிப் பிரமாணமும், ரகசியக் காப்பு உறுதிமொழியும் செய்துவைத்தார்.

கருணாநிதியைத்தொடர்ந்து அன்பழகன், மு.க.ஸ்டாலின் உட்பட 30 பேர் அமைச்சர் பொறுப்பை ஏற்றனர். அவர்களுக்கும் ஆளுநர் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

பதவி ஏற்பு விழாவில் மத்திய அமைச்சர்களான பிரணாப் முகர்ஜி, தமிழகக் காங்கிரஸ் தலைவர்கள் கிருஷ்ணசாமி, வாசன், பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ் மற்றும் கம்யூனிஸ்ட் தலைவர்கள் கலந்துகொண்டனர்.

புதிய அமைச்சரவையைக் காண நேரு ஸ்ரேடியத்துக்கு ஆயிரக்கணக்கான பொது மக்களும் வந்திருந்தனர். அவர்கள் நிகழ்ச்சியைப் பார்க்க வசதியாக நேரு ஸ்ரேடிய வளாகத்தில் ஆங்காங்கே தொலைக்காட்சிப் பெட்டிகள் வைக்கப்பட்டிருந்தன.

பதவி ஏற்பு விழா முடிந்ததும் முதல் அமைச்சர் கருணாநிதி நேராக தலைமைச் செயலகத்துக்குச் சென்றார். முதல்வர் அறையில் அமர்ந்து தனது பணியைத் தொடங்கினார். அதுபோல மற்ற அமைச்சர்களும் தங்களது அறைகளுக்குச் சென்று பணியை ஆரம்பித்தனர். (த)

தி.மு.கவினர் தாக்குவரென அச்சம்; பேரவைக்குச் செல்லமாட்டாராம் ஜெ.

சென்னை,மே14

தமிழக சட்டப் பேரவையில் 1989 இல் நடந்த சம்பவத்தை யாரும் மறந்திருக்க மாட்டார்கள். அதே முதல்வர், அதே அமைச்சர்கள் வந்துள்ளனர். எனவே பேரவைக்கு நான் வருவது சரியாக இருக்காது என்று அ.தி.மு.க. பொதுச் செயலர் ஜெயலலிதா கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

சட்டப்பேரவைக்கு நான் வரவேண்டும் என்று எல்லோரும் எதிர்பார்ப்பதாகச் சொன்னார்கள். ஆனால், 1989ஆம் ஆண்டு மார்ச் 29 ஆம் திகதி நான் தாக்கப்பட்டதை யாரும் மறந்திருக்கமுடியாது. அப்போது யார் அவமானப்படுத்தினார்களோ? தாக்கினார்களோ? அவர்கள் எல்லோரும் தற்போது வந்திருக்கிறார்கள். அடிப்படை நாகரிகம், பண்பாடு தெரியாத காட்டுமிராண்டிக் கும்பல். அதனால், பேரவைக்கு நான் வருவது சரியாக இருக்காது. அ.தி.மு.க. எம்எல்ஏக்களுக்கு வழிகாட்ட நான் இருக்கிறேன். அவசியம் ஏற்பட்டால் வருவேன் பார்க்கலாம்.

கடந்த 5 ஆண்டு காலமாக 2001 ஆம் ஆண்டுமுதல் 2006 ஆம் ஆண்டுவரை மிகவும் கண்ணியமான முறையில் ஆட்சியையும் சட்டப்பேரவையையும் நடத்தினேன்.

1989 இல் நடந்ததைப் போல் கேவலமான வன்முறை சம்பவம் நடந்ததே இல்லை. 2001-2006 ஆம் ஆண்டு வரை நாங்கள் ஆளும் கட்சியாக இருந்தபோது எதிர்க்கட்சியாக அமர்ந்திருந்த தி.மு.கவினர். கண்ணியக்குறைவாகவும் அநாகரிகமாகவும் நடந்து கொண்டார்கள். அடிப்படைப் பண்போடு நடக்கவில்லை. நான் முதல்வராக இருந்தபோதே அப்படி நடந்தார்கள்.

அதே முதல்வர் அதே அமைச்சர்கள். இந்தநாகரிகம் தெரியாத காட்டுமிராண்டிக் கும்பல் முன் அம்மா வரக்கூடாது என்று அ.தி.மு.கவினர் முடிவு எடுத்திருக்கிறார்கள்.

அவர்களது முடிவுக்கு மதிப்பளிக்கிறேன். சட்டப்பேரவைக்கு நான் வராமல் இருப்பதற்குக் காரணம் உள்ளது. கருணாநிதி வராமல் இருந்ததற்கு எந்தக் காரணமும் இல்லை. என்றார் ஜெயலலிதா.

முதல்வரின் முதல் உத்தரவு

சென்னை,மே 14

எதிர்வரும் ஜூன் 3 ஆம் திகதி முதல் பங்கீட்டு அட்டைக்கு ஒரு கிலோ அரிசி 2 ரூபாவுக்கு வழங்கப்படும் என்று முதல்வர் கருணாநிதி தெரிவித்தார்.

நேற்று முதல்வராக பதவியேற்றதும் இதற்கான உத்தரவிலேயே அவர் முதலில் கையெழுத்திட்டார். தற்போது பங்கீட்டு அட்டைக்கு ஒரு கிலோ அரிசி 3.50 ரூபாவுக்கு வழங்கப்படுகிறது.

மேலும் விவசாயிகளின் 6,866 கோடி ரூபாய் கூட்டுறவு கடன்களை தள்ளுபடி செய்வதாகவும் தெரிவித்தார்.

ஜூலை 15 முதல் மதிய சத்துணவுத் திட்டத்தில் வாரம் இரு முட்டைகள் வழங்கப்படும் - என்றும் கூறியுள்ளார்.

தி.மு.கவைவிட அ.தி.மு.கவுக்கு 19 லட்சம் வாக்குகள் அதிகம்!

நடந்து முடிந்த தமிழக சட்டசபைத் தேர்தலில் தி.மு.க. வெற்றிபெற்று ஆட்சியமைத்திருக்கிறது. எனினும் இந்தத் தேர்தலில் தி.மு.கவை விட அ.தி.மு.கவுக்கே கூடுதலான வாக்குகள் கிடைத்திருக்கின்றன. 19 லட்சத்து 50 ஆயிரத்து 558 வாக்குகளை தி.மு.கவை விட அ.தி.மு.க. கூடுதலாகப் பெற்றிருக்கிறது.

அ.தி.மு.க. 188 இடங்களில் போட்டியிட்டு 61 இடங்களில் வெற்றிபெற்றது. தி.மு.க. 132 இடங்களில் போட்டியிட்டு 95 இடங்களைக் கைப்பற்றியது. இரு கட்சிகளும் பெற்றுக் கொண்ட மொத்த வாக்குகளின் அடிப்படையில் 19 லட்சத்து 50 ஆயிரத்து 558 வாக்குகள் தி.மு.கவை விட அ.தி.மு.க. அதிகமாகப் பெற்றுள்ளது. (த)

தமிழகம் - புதுவையில் தி.மு.க. - காங்கிரஸ் பரஸ்பரம் ஆதரவு

தமிழகத்திலும் புதுவையிலும் தி.மு.க. மற்றும் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் பரஸ்பரம் ஆதரவை பரிமாறிக் கொள்கின்றன.

தமிழகத்தில் தி.மு.க. 95 உறுப்பினர்களுடன் நேற்று ஆட்சி அமைத்தது. அங்கு தி.மு.கவுடன் கூட்டணி அமைத்து தேர்தலில் போட்டியிட்ட காங்கிரஸ் 35 ஆசனங்களுடன் தி.மு.கவுக்கு வெளியிலிருந்து ஆதரவு வழங்குவதாக அறிவித்திருக்கின்றது.

அதுபோலவே புதுவையிலும் 10 உறுப்பினர்களுடன் காங்கிரஸ் மீண்டும் ஆட்சி அமைக்கின்றது. அங்கு 7 ஆசனங்களைப் பெற்ற தி.மு.க. காங்கிரஸுக்கு வெளியில் இருந்து ஆதரவு வழங்குகிறது. தமிழகத்திலும் புதுவையிலும் இருகட்சிகளும் பரஸ்பரம் வெளியில் இருந்து ஆட்சிக்கு ஆதரவு வழங்குகின்றன.

இதேவேளை, புதுவை முதல்வராக மீண்டும் எஸ்.ரங்கசாமி தெரிவுசெய்யப்படவிருக்கின்றார். (த)

அரசு சட்டத்தரணிகள் பதவி விலகினர்

தமிழக அரசின் சட்டமா அதிபர் என். ஆர். சந்திரன் மற்றும் உயர் நீதிமன்றத்தில் உள்ள அரச சட்டத்தரணிகளும் தங்கள் பதவிகளை ராஜினாமா செய்து வருகின்றனர்.

ஜெயலலிதாவுக்கு எதிரான ஊழல் வழக்குகளை அ.தி.மு.க. அரசு சார்பில் இவர்களே நடத்தி வந்தனர். தற்போது ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ளது. எனவே, இவர்களை வைத்து தி.மு.க. அரசு அந்த வழக்குகளை நடத்தமாட்டாது என்ற நிலையிலேயே இவர்கள் பதவி விலகுகின்றனர்.

எண்ணெய் குழாய் வெடித்து நைஜீரியாவில் 200 பேர் பலி!

நைஜீரியா நாட்டின் லாகோஸ் நகரின் புறநகர்ப் பகுதியில் எண்ணெய் குழாய் வெடித் ததில் 200 பேர் பலியாகினர். நைஜீரியாவில் மசகு எண்ணெய் குழாய்கள் மூலம் எடுத்துச் செல்லப்படுகின்றது. இந்தக் குழாய்களிலிருந்து மசகு எண்ணெயை திருடுவது வழக்கமாக நடந்துவருகிறது. அதேபோல் நேற்றுமுன்தினம் பலர் எண்ணெய் திருடிக் கொண்டிருந்த போது எண்ணெய் குழாய் ஒன்று பயங்கரமாக வெடித்தது.

அப்போது ஏற்பட்ட பயங்கர தீ விபத்தில் 200க்கும் மேற்பட்டோர் தீயில் கருகி இறந்தனர். ஐம்பதுக்கும் மேற்பட்டவர்களின் உடல்கள் அடையாளம் காணமுடியாத அளவுக்கு கருகியுள்ளன. பலரின் உடல்கள் அருகில் இருந்த கடலில் தூக்கி வீசப்பட்டிருந்தன. சம்பவம் நடந்த லாகோஸ் நகரின் புறநகர்ப் பகுதியான இனாக்ப பீச் மக்கள் தொகை அதிகம் நிறைந்த பகுதி அல்ல. எண்ணெய் குழாய்களில் ஓட்டை போட்டு அவற்றை திருட ஏராளமானவர்கள் இங்கு வருவர். அப்படி வந்தவர்களே வெடிவிபத்தில் பலியாயினர் என்பது குறிப்படத்தக்கது.

அமெரிக்காவுக்கு செஞ்.சங்கம் கண்டனம்

இரகசிய இடத்தில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருப்பவர்களை சந்திக்க செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் பிரதிநிதிகளுக்கு அனுமதி மறுக்கப்பட்டதை அடுத்து செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அமெரிக்காவுக்கு கண்டனம் தெரிவித்துள்ளது.

ஒரு நபரை தடுப்புக் காவலில் வைப்பதற்கு சட்டபூர்வமான காரணங்கள் இருக்கலாம். ஆனால், அவர் எங்கு அடைத்து வைக்கப்பட்டுள்ளார் என்பதை மறைப்பதற்கோ மறுப்பதற்கோ உரிமை இல்லை என செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் தலைவர் ஜேக்கப் கெலன்பெர்கர் கூறியுள்ளார்.

ஈராக், ஆப்கானிஸ்தான், கியூபா போன்ற நாடுகளில் அமெரிக்கா சிறைச்சாலைகளை அமைத்துள்ளது. இவற்றைப் பார்வையிட செஞ்சிலுவைச் சங்கத்தை மட்டுமே அமெரிக்கா அனுமதித்து வருகின்றது.

இவை தவிர இரகசியக் இடங்களில் சிறையில் அடைக்கப்பட்டுள்ளவர்களை சந்திக்க அமெரிக்கா அனுமதிக்கவேண்டும் எனச் செஞ்சிலுவைச் சங்கம் நீண்ட நாள்களாகக் கோரி வருகிறது.

ஜெனீவா ஒப்பந்தங்களின் அடிப்படையில் சர்வதேச [illegible] அமைபெற்ற [illegible] தேசக் குழுவே அங்கீகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அ.தி.மு.கவுக்காக பிரசாரம் செய்த நடிகர், நடிகைகளுக்கு மிரட்டலாம்!

சரத்குமாருக்கு ஆபாச எஸ்.எம்.எஸ்

அ.தி.மு.கவுக்கு ஆதரவாகப் பிரசாரம் செய்த நடிகர், நடிகைகளுக்கு தொலைபேசி மூலம் மிரட்டல்கள் வருகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது.

அ.தி.மு.கவுக்கு ஆதரவாக நடிகைகளான சிம்ரன், விந்தியா, கோவைசரளா நடிகர்களான சரத்குமார், ராதாரவி, ராமராஜன், டைரக்டர்கள் மனோஜ்குமார், மனோபாலா, விசு, பாடலாசிரியர் சினேகன் உட்பட 20இற்கும் மேற்பட்ட சினிமா கலைஞர்கள் பிரசாரம் செய்தனர்.

இதேபோல் தி.மு.க. கூட்டணிக்கு நடிகர் நெப்போலியன், தியாகு, பாக்கியராஜ் உட்பட பலர் பிரசாரம் செய்தனர்.

தற்போது நடிகர் - நடிகைகள் சினிமா பக்கம் தங்கள் கவனத்தை செலுத்த ஆரம்பித்து விட்டனர். ஆனாலும் நடிகர், நடிகைகளுக்கு எஸ்.எம்.எஸ்.மூலம் தற்போது மிரட்டல் வரத் அ.தி.மு.கவை ஆதரித்து பிரசாரம்செய்த நடிகர் - நடிகைகளுக்கு மிரட்டல்கள் அதிகமாக வருகிறது என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை -

நடிகர் சரத்குமாரை ஆபாசமொழியில் திட்டி அவரது கைத்தொலைபேசிக்கு எஸ்.எம். எஸ். அனுப்பப்பட்டிருப்பதாகப் பொலீஸில் புகார் செய்யப்பட்டிருக்கிறது.

நடிகர் சரத்குமார், அண்மையில் தி.மு.கவில் இருந்து விலகி அ.தி.மு.கவில் சேர்ந்தார்.

இந்த நிலையில் சரத்குமாருக்கு யாரோ ஒருவர் ஆபாச மொழியில் எஸ்.எம்.எஸ். அனுப்பியுள்ளார். (த)

வைகோ வீட்டுக்கு பொலிஸ் பாதுகாப்பு

ம.தி.மு.க பொதுச் செயலர் வை.கோபாலசாமி வீட்டின் மீது நேற்றுமுன்தினம் இனந்தெரியாத நபர்கள் சிலர் கற்களை வீசித் தாக்கியதுடன் தகராறிலும் ஈடுபட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. தகராறில் ஈடுபட்டவர்களை பிடிப்பதற்கு ம.தி.மு.க. தொண்டர்கள் முயற்[illegible] அவர்கள் தப்பி விட்டனர் என்று [illegible] இந்தச் சம்பவத்தையடுத்து அவரது வீட்டுக்கு பொலீஸ் பாதுகாப்பு போடப்பட்டிருக்கிறது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி, தொலைநகல் - 222 2030, 222 2083, 222 3837

ஈழத் தமிழர்களுக்கு எதிராக மற்றொரு சர்வதேச வலை

இலங்கையில் ஈழத் தமிழர்களுடைய இனப்பிரச்சினையைக்கையாளுகின்ற பல தரப்புகள் - பிரதான தரப்பான தென்னிலங்கை சிங்கள அரசுத் தலைமை உட்பட - அனைத்துப் பங்காளிகளுமே இவ்விவகாரத்தின் அடிப்படை யதார்த்தங்களைப் புரியாமல் - அல்லது புரிந்துகொள்ள முயற்சிக்காமல் - அது சம்பந்தமான நடவடிக்கைகளை எடுத்து மூக்குடைபட்டுக் கொண்டு போவதைப் பட்டறிவாகக் காணும்வாய்ப்பு எமக்குக் கிட்டி வந்துள்ளது.

எண்பதுகளின் பிற்புகுதியில் இலங்கைத் தமிழர் விவகாரத்தில் இடம்பெற்ற இந்தியத்தலையீட்டில் இருந்து அண்மைக் காலத்தில் இவ்விடயத்தைக் கையாண்ட பிரதமர் ரணிலின் தலைமை வரை பல தரப்புகளினதும் பட்டறிவுகள் நல்ல அனுபவப் பாடங்களாகும்.

இனப்பிரச்சினையில் சம்பந்தப்பட்ட பிரதான தரப்பான தமிழர்களின் பக்கத்துக் கருத்தையோ, அவர்களின் நிலைப்பாட்டையோ உள்வாங்காமல், ஒரு தலைப்பட்சமாகத் தமது தீர்மானங்களைத் தமிழர் தரப்பு மீது திணிக்க முற்பட்டதன் பலாபலனை அவ்வாறு பலவந்தமாகத் திணிக்க முற்பட்ட தரப்புகள் எதிர்கொள்ள வேண்டியதாயிற்று.

ஸ்தம்பித்துப் போயிருக்கும் அமைதி முயற்சிகளை முன்னெடுக்க உதவுவது என்ற சாக்கில் - பெயரில் - 'இலங்கையின் நட்புறவு நாடுகள்' (Countries Friendly To Sri Lanka) என்ற நாமத்துடன் புதியதோர் அமைப்பை உருவாக்க எடுக்கப்படும் முயற்சியையும் இந்தப் பின்னணியில்தான் நோக்க வேண்டியிருக்கின்றது.

2003 ஜூனில் ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் இடம்பெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தை ஈழத் தமிழர்களின் ஏக - அதிகாரபூர்வ - பிரதிநிதிகளான விடுதலைப் புலிகள் அடியோடு புறக்கணித்து நிராகரித்தனர். அந்த மாநாட்டில் - புலிகள் பங்குபற்றாத நிலையில் - ஒரு தீர்மானத்தை நிறைவேற்றிக்கொண்டு, அந்த மாநாட்டில் பங்குபற்றிய நான்கு சர்வதேசத் தரப்புகளை ஒன்றிணைத்து 'இணைத் தலைமை' என்ற நாமத்தை அதற்குச் சூட்டிக்கொண்டு அதை வைத்துத் தமிழர் தரப்பைக் கட்டுப்படுத்தும் தந்திரோபாயத் திட்டத்தை ஒரு தலைப்பட்சமாக முன்னெடுத்தது அப்போதைய ரணில் அரசு.

தமிழர் தரப்பின் பங்களிப்பு, சம்மதம், இணக்கம் ஆகியவையின்றி, தம்பாட்டில் உருவாக்கப்பட்ட இணைத் தலைமைகளை வைத்துக்கொண்டு, தமிழர் தரப்பை அழுத்தம் கொடுத்து அடக்கவைப்பதற்கு எடுக்கப்பட்ட முயற்சி பலனளிக்காத நிலையில் -

புதிய பெயரோடு, புதிய சர்வதேச அமைப்பின் சாயலில் ஒன்றைத் தோற்றுவித்து, அதன் மூலம் தமிழர் தரப்பு மீது புதிய அழுத்தங்களைப் போடும் மற்றொரு தந்திரோபாயம் இப்போது கட்டவிழ்வது அப்பட்டமாகப் புலப்படுகின்றது.

ஏற்கனவே உள்ள இணைத்தலைமை நாடுகளின் கூட்டமைப்போடு புதிய சில வல்லாதிக்க நாடுகளை இந்தப் புதிய அமைப்புக்குள் கொண்டுவர முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்றும் தெரிகின்றது.

விடுதலைப் புலிகள் அமைப்பை ஏற்கனவே தத்தமது நாடுகளில் தடைசெய்திருக்கும் இந்தியா, பிரிட்டன், கனடா போன்ற நாடுகளையே இந்தப் புதுக் கூட்டமைப்புக்குள் கொண்டு வருவதற்கு திட்டமிடப்பட்டிருக்கின்றதாம்.

ஈழத்தமிழர் தரப்பின் விடுதலைப் போராட்ட சக்தியாகவும் ஆயுதம் தாங்கிய வலுவாகவும் இருக்கும் விடுதலைப் புலிகளை தத்தமது நாடுகளில் தடைசெய்திருக்கும் தேசங்களே இந்தப் புதிய கூட்டமைப்புக்குள் கொண்டு வரப்படுவதால் இது நிச்சயம் 'இலங்கையின் நட்புறவு நாடுகள் கூட்டமைப்பு' ஆக மலர முடியும். ஆனால், அது நிச்சயமாக - உறுதியாக - ஈழத் தமிழரின் நலனை உறுதி செய்யும் ஒரு கூட்டமைப்பாக உருவாகாது என்பது திண்ணம்.

இவ்வாறு இப்பிரச்சினையின் பிரதான தரப்பான தமிழர்களுக்கு உடன்பாடில்லாத - அல்லது அவர்களால் ஏற்றுக்கொள்ள முடியாத - சர்வதேச சக்திகளை இவ்விடயத்துக்குள் கொண்டு வந்து செருகும் எத்தனங்களை ஒரு தலைப்பட்சமாக எடுப்பது தீர்வு முயற்சிகளைக் குழப்பி, நிலைமையை மேலும் மோசமாக்கும் என்பதை இத்திட்டத்தில் முனைப்புடன் ஈடுபட்டிருக்கும் பிரமுகர்கள் சிந்திப்பது நல்லது.

இலங்கை இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வை பெற்றுத்தரும் முயற்சிகளில் ஆக்கபூர்வமான முன்னேற்றவு எதனையும் தோற்றுவிக்க வேண்டுமானால், அதற்கு சம்பந்தப்பட்ட இரண்டு பிரதான தரப்புகளின் சம்மதத்துடனான எத்தனங்களையே நாட வேண்டும்.

அதைவிடுத்து, ஒரு தரப்புக்கு முரணான - அல்லது அத்தரப்புடன் முரண்பட்டு நிற்கின்ற - சர்வதேச சக்திகளை ஒன்றிணைப்பது பிரச்சினைக்கு இணக்கத் தீர்வு ஏற்பட வழிசெய்யாது.

சர்வதேச சக்திகளை இணைக்கின்றோம் என்ற பெயரில் நிலைமையை மோசமாக்கும் வகையில் எடுக்கப்படும் இத்தகைய நடவடிக்கைகளுக்கு அனுசரணைத் தரப்பான நோர்வே மற்றும் ஜப்பான் போன்ற நாடுகள் இடமளிக்கக் கூடாது. இவ்விடயத்தில் இந்த நாடுகளின் பொறுப்புணர்வுடன் கூடிய செயற்பாட்டை ஈழத்தமிழர்கள் உரிமையுடன் எதிர்பார்க்கிறார்கள்.

மாணவர் பேரவை அலுவலகம் எரிப்பு கல்விச் சமூகத்துக்கு விடப்பட்ட சவால்

கண்டன அறிக்கையில் பேரவையினர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே14

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை அலுவலகம் தீக்கிரையாக்கப்பட்டமை கல்விச் சமூகத்துக்கு விடப்பட்ட பாரிய சவாலாகும்.

தமது அலுவலகம் நேற்றுமுன்தினம் நள்ளிரவு எரிக்கப்பட்டதைக் கண்டித்து சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை விடுத்த கண்டன அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது.

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை நெருங்கி வரும் இவ்வேளையில் எமது அலுவலகத்தை தீ மூட்டி பெறுமதியான புத்தகங்களையும் பல லட்சம் ரூபா பெறுமதியான சொத்துக்களையும் அழித்துள்ளனர். இதனூடாக மாணவர் கல்வியை சீரழித்துள்ளனர்.

வறிய, பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு உதவிபுரியும் தொண்டு நிறுவனமான எமது அலுவலகத்திற்குள் நுழைந்த படையினர் எமது அலுவலகத்தை தீயிட்டு எரித்ததுடன் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் அவர்களின் அலுவலகத்தையும் தீயிட்டுள்ளனர். இது கல்விச் சமூகத்துக்கு விடப்பட்ட பாரிய சவாலாகும். படையினரின் இச்செயலினை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். குடாநாட்டில் பாரிய கல்விச்சேவையினை நாம் செய்துவருவதனை பொறுக்கமுடியாத படையினர் பல தடவைகள் எமது அலுவலகத்துக்குள் உள் நுழைந்து தாக்கியுள்ளனர்.

இவை தொடர்பாக நாம் நேரிலும் எழுத்து மூலமாகவும் கண்காணிப்புக் குழுவுக்குத் தெரிவித்தபோதும் எதுவித நடவடிக்கையும் எடுக்க கண்காணிப்புக் குழு தவறிவிட்டது.

எனவே இந்த எரிப்புச் சம்பவத்தில் சம்பந்தப்பட்ட படையினரை சட்டத்தின் முன் நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு அனைத்துத் தரப்பினரையும் கேட்டுக்கொள்கின்றோம். இல்லாவிட்டால் நிலைமை மோசமடைந்து குடாநாட்டு கல்வி நிலையங்கள் படையினரால் அழிக்கப்பட்டுவிடும் என்பதனை சுட்டிக் காட்டுகின்றோம் - என்றுள்ளது.

போர்நிறுத்த ஒப்பந்தத்தை மீறுவோர் படையினர் என்பது மூதூரில் நிரூபணம்

'விக்கியின் நிழல்கள்' அமைப்பு விளக்கம்

போர்நிறுத்த ஒப்பந்தத்தை மீறுவோர் படையினரே என்பது மூதூர் தாக்குதலில் நிரூபணமாயிருக்கிறது - இவ்வாறு திருகோணமலை மாவட்ட ''விக்கியின் நிழல்கள்'' அமைப்பு தெரிவித்திருக்கிறது.

ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் ''விக்கியின் நிழல்கள்'' மேலும் தெரிவித்திருப்பதாவது:-

ஸ்ரீலங்கா அரசிற்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான போர்நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திட்டதிலிருந்து இன்றுவரை தாக்குதல்களுக்கு முகம்கொடுப்பவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளும், தமிழ் பேசும் மக்களுமே.

போர்நிறுத்த காலத்தில் அரச கட்டுப்பாட்டுப் பகுதியிலேயே தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர்கள் கொல்லப்பட்டார்கள். அதற்குப் புலிகள் பதிலடி தந்தார்களா? அவர்கள் எவ்வளவு ஆழமான போர்நிறுத்த ஒப்பந்தத்தை நேசிக்கிறார்கள்.

மூதூர் விமானப் படையினரால் இலக்குத் தவறிப் போடப்பட்ட குண்டு விழுந்து ஸ்ரீலங்கா படையினரும் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களைக் கேளுங்கள் தாக்குதலை யார் நடத்தினார்கள் என்று. மாறாகப் பொய்ப்பிரசாரம் செய்யாதீர்கள்.

ஜனாதிபதி செயலகத்தினால் திருகோணமலையில் தாக்குதல்கள் நிறுத்தப்பட்டுவிட்டதாகவும், தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடி நிவாரண மீள் குடியேற்ற நடவடிக்கைகளுக்கு ஏற்பாடு செய்யுமாறு அறிக்கை விடுகிறீர்கள். ஜனாதிபதி அவர்களே! உங்களின் கூற்று பிள்ளையையும் கிள்ளி விட்டு தொட்டிலையும் ஆட்டிவிடும் செயல்போலல்லவா உள்ளது.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு கூட தமது அறிக்கையில் திருகோணமலையில் தாக்குதல்கள் இடம்பெற்ற பகுதிகள் அனைத்தும் பொதுமக்கள் வாழ்விடங்களே எனக்கூறியதுடன் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களும் தமிழ் பேசும் பொதுமக்களே என திட்டவட்டமாகக் கூறுகிறார்கள்.

எனவே, போர்நிறுத்த ஒப்பந்தத்தில் உண்மையானதும், நேர்மையானது மான விசுவாசம் இருக்கிறது எனக் கூறி இந்த இறுதிப் பேச்சுக்கான சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள். போரா? சமாதானமா? என்பதை உடனடியாகக் கூறுங்கள்.

எமது தலைவனின் ஆணைக்குத் தமிழீழ விடுதலைப் புலிகள் காத்திருப்பது உங்களுக்கு வேடிக்கையாக இருக்கலாம். ஆனால், அதுதான் போர்நிறுத்த ஒப்பந்தம் மீதான தமிழீழ விடுதலைப் புலிகளின் நேர்மைத் தன்மையும், விசுவாசத்தினதும் வெளிப்பாடு ஆகும்.

- இவ்வாறு ''விக்கியின் நிழல்கள்'' அமைப்புத் தெரிவித்திருக்கிறது.

சம்பள உயர்வு இம்மாதமில்லை

தென்மராட்சி,மே14

யாழ். மாவட்ட அரச ஊழியர்களுக்கு அதிகரித்த சம்பள உயர்வு இம்மாதம் கிடைக்காது எனத் தெரியவருகிறது.

மாவட்டத்தில் உள்ள பல திணைக்களங்களுக்கு இதுவரை உரியசுற்றறிக்கை கிடைக்கவில்லை என்றும் -

மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தினால் சம்பள மீளாய்வு செய்யப்படாததாலும் -

மேமாத சம்பளத்துடன் சம்பளஅதிகரிப்பு கிடைக்காது என்று கூறப்படுகிறது. (117)

தென்னைக்கு மருந்து தெளிப்பதாகக் கூறி மோசடி செய்தோர் வசமாகச் சிக்கினர்

தென்னை மரங்களுக்கு மருந்து தெளிப்பவர்கள் என்று கூறி மோசடியில் ஈடுபட்டவர்கள் கிராம சேவையாளரிடம் சிக்கினார்கள்.

சில நாள்களுக்கு முன்னர் கைதடிப் பகுதியில் உள்ள வீடுகளுக்குச் சென்ற மூவர் தாங்கள் உதவி விவசாயப் பணிப்பாளர் அலுவலகத்தில் இருந்து வருகின்றார்கள் என்று அறிமுகப்படுத்திக் கொண்டனர். நோய்பீடித்திருக்கும் தென்னை மரங்களுக்கு மருந்து விசிறுவதற்கு உதவி விவசாயப்பணிப்பாளர் தமக்கு அனுமதியளித்துள்ளார் என்றும் கூறினர். அதற்கு ஆதாரமாக சில ஆவணங்களையும் காண்பித்தனர். பொதுமக்களும் அவர்களை நம்பி தென்னைகளுக்கு மருந்து தெளிக்க சம்மதித்தனர். தெளித்தபின்னர் அவர்கள் கேட்ட பணத்தையும் மக்கள் கொடுத்தனர். இவ்வாறு கணிசமான பணத்தை தினமும் அந்த மூவரும் வசூலித்துவந்தனர்.

இந்நிலையில், இந்த மூவர் குறித்து சந்தேகம் கொண்ட சிலர் அப்பகுதி கிராம சேவகரிடம் தகவல் தெரிவித்தனர்.

சம்பவதினமும் காலை குறிப்பிட்ட மூவரும் கைதடிப்பகுதியிலுள்ள வீடொன்றில் தென்னைக்கு மருந்து தெளித்துக்கொண்டிருந்தனர். அங்கு சென்ற கிராம சேவையாளர் தன்னை அறிமுகப்படுத்திவிட்டு அவர்களைப் பற்றி விசாரித்ததோடு அவர்கள் வைத்திருந்த ஆவணங்களையும் கிராம சேவகர் பரிசோதித்தார். அவை போலி ஆவணங்கள் எனக் கண்ட கிராம சேவகர் தேசிய அடையாள அட்டைகளைத் தருமாறு கேட்டார். தமது குட்டு வெளிப்பட்டுவிட்டது என்பதனை உணர்ந்த மேற்படி மூவரும் தப்பியோட முயன்றனர். எனினும், அங்கு நின்ற இளைஞர்கள் சுற்றி வளைத்து அவர்களைப் பிடித்து கிராம சேவையாளரிடம் ஒப்படைத்தனர். அவர்களிடமிருந்த போலியான ஆவணங்களையும் மருந்துகளையும் கைப்பற்றிய கிராம சேவையாளர், பொருள்களை கைதடி கமநல சேவை நிலையத்தில் ஒப்படைத்தார். அத்துடன், இம்மூவர் மீதான மேலதிக நடவடிக்கைகளையும் அவர் மேற்கொண்டுள்ளார். (75)

உதயவாக்கு

தனது சுகத்திற்காக பிறரை வேலை வாங்குகிறவன் மிருகமாகிறான்.

நாளை

வைகாசி - 01
திங்கட்கிழமை
15.05.2006
திதி : துதியை
பிற்பகல் : 12.06
நட்சத்திரம் : கேட்டை
முன்னிரவு : 10.08
சந்திராஷ்டமம் : 01.53 - 01.23
ராகுகாலம் : 07.23 - 8.53

மோ.சைக்கிளில் சென்ற யுவதியை வழிமறித்து தங்கநகை கொள்ளை

கைதடி,மே14

மோட்டார் சைக்கிளில் உறவினருடன் சென்ற யுவதியிடம் தங்கச் சங்கிலி கொள்ளையிடப்பட்டது. கடந்த வெள்ளிக்கிழமை செம்மணி மயானமருகே காலை 6 மணிக்கு இச்சம்பவம் இடம்பெற்றது.

அன்றையதினம் காலை வவுனியா செல்வதற்கென மோட்டார் சைக்கிளில் நல்லூரில் இருந்த உறவினருடன் மேற்படி யுவதி புறப்பட்டார். செம்மணி இந்து மயானத்திற்கு அண்மையில் அவர்கள் சென்றுகொண்டிருந்தவேளையில் கறுப்புத்துணியால் முகத்தை மறைத்தவாறு வந்த மூவர் வாள்களைக் காட்டி தடுத்து நிறுத்தினர். பின்னர் அவர்கள் யுவதி அணிந்திருந்த இரண்டரைப்பவுண் எடையுள்ள தங்கச் சங்கிலியை அறுத்தெடுத்தனர். பின்னர் அச்சுறுத்திவிட்டு வயல்களினூடாகத் தப்பியோடிவிட்டனர்.

அண்மைக்காலமாக பகல் இரவு என்று பாராது கொள்ளையர்கள் அப்பகுதியில் பொதுமக்களிடம் கொள்ளையிடும் சம்பவங்கள் அதிகரித்துவருவதாகக் கூறப்படுகிறது. (75)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னஞ்சிறு விளம்பரங்கள்

இறைச்சிக் கோழி விற்பனைக்கு

Prima, Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் சுகாதாரமுறைப்படி உடன் சுத்தம் செய்து தினமும் பெற்றுக்கொள்ளலாம். (Electronic நிறுவை.(நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (சி/49260)

கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டு முறை தடுப்பு மருந்து போடப்பட்ட (Original Prima Broiler) குஞ்சுகள், பேட்டுக்குஞ்சுகள் 22-05-2006 திங்கட்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். முற்பதிவுசெய்து கொள்ளவும். எமது பருத்தித்துறை, நெல்லியடிக்கிளைகளிலும் சுட்டிபாம்-வட்டுக்கோட்டை, உடுவில் பாம், உடுவில், நல்லூர் பாம் சென்ரர், 19,முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (C/49259)

வீடு விற்பனைக்கு

அளவெட்டி வடக்கு, மெயின் வீதியில் 4½ பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 4202623. (சி/49187)

விற்பனைக்கு

MD 90-12V மோட்டார் சைக்கிள், நல்ல நிலையில் உள்ள லிஸ்டர் எஞ்சின் டைனமோ (இங்கிலாந்து), அலுமினியம் பொடி 14' விற் பனைக்குண்டு. தொடர்பு:372, பஸ்ரியான் சந்தி, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.தொ.பே.: 6192. (50201)

தவறிவிட்டது

ஆலங்குழாய், சண்டிலிப்பாய் என்ற முகவரியை உடைய சபாநாதன் பிரணவன் என்பவருடைய கடவுச்சீட்டு (பாஸ்போட்) தற்காலிக அடையாள அட்டை மற்றும் முக்கிய ஆவணங்கள் தட்டாதெரு சந்திக்கும் ஆனைக்கோட்டைச் சந்திக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மானிப்பாய் ப.நோ.கூ.சங்கத்தில் ஒப்படைத்துதவவும். தொ.பே.: 077-320 4858. (தகுந்த சன்மானம் வழங்கப்படும். (50200)

மானிப்பாய் கிழக்கைச் சேர்ந்த சந்திரலிங்கம், சுஜீவன் என்பவரின் தேசிய அடையாள அட்டை (840553590V)யாழ்.நகரப் பகுதிக்குள் தவறிவிட்டது.கண்டெடுத்தவர்கள் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: பக்கஸ் லேன், உடுவில் றோட், மானிப்பாய். தொ.பே.: 0777332621. (50202)

வெளிநாட்டுப் பயண
ஆலோசனைகளுக்கும் ஒழுங்குகளுக்கும்
தொ.பே.: 0714353000, 0777880277
M.T.Rajah.
(50169)

மரண அறிவித்தல்கள்

நல்லையா தவராசா

ஏழாலையைப் பிறப்பிடமாகவும் கட்டுவன் தென்மயிலையை வசிப்பிடமாகவும் கொண்ட நல்லையா தவராசா அவர்கள் 11.05.2006 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லையா - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும் சீவரத்தினம் (குருவி, சிவஞானம்) ஆகியோரின் அன்பு மருமகனும் இந்திராதேவியின் அன்புக் கணவரும் கீத்தா, கபேஸ்சன் (யா/தேசிய கல்வியியல் கல்லூரி இறுதிவருட மாணவன்), சதீசன் ஆகியோரின் அன்புத் தந்தையும் யோகராசா, தவமலர், நவமலர், யோகமலர், இராசமலர், ஜெயமலர் ஆகியோரின் அன்புச் சகோதரனும் தெய்வேந்திரன் (ஹொலண்ட்), கமலாதேவி, ரவீந்திரன் (பிரான்ஸ்), சரோஜினி தேவி (பிரான்ஸ்), பாலேந்திரன் (பிரான்ஸ்), லலிதாதேவி (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.05.2006) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தற்போதைய வதிவிடமான கோண்டாவில் கிழக்கு குமரகோட்டத்தில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குமரகோட்டம்,
கோண்டாவில் கிழக்கு. (50204)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

கார்த்தி யேசுதாசன்

நவாலி வடக்கு, கேணியடி தாசன் இல்லத்தைச் சேர்ந்த கார்த்தி யேசுதாசன் 12.05.2006 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்தி-அன்னம்மா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் தேவமலரின் அன்புக் கணவரும் மரியதாஸ், தேவதாஸ், அருள்தாஸ், திரேசம்மா ஆகியோரின் சகோதரனும் கணேசின் மைத்துனரும் மத்தியூஸ் மனோகர் (வவுனியா), மத்தியூஸ் ரஞ்சன், நித்தியானந்தன்(லண்டன்), எட்வேட் ராசன்(பிரான்ஸ்), தேவரஞ்சினி, தேவராணி, ஞானமலர், தேவரமணி, லூர்த் ஜீவா(பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் அமலசிங்கம், அரியதாஸ், சிவம், தர்மராஜா, ஜீவரட்ணம் (பிரான்ஸ்), மஞ்சுளா, புஸ்பா, காந்தி, சாந்தி ஆகியோரின் அன்பு மாமனும் மனோகீதன்,மதீபன், மப்சியா, மதுர்பனா, அமிலா, அனுஜா, அமிலன், அனுராஜ், அஜந்தன், சுரேஷ் லமீடா, லமீடன், லஜிதா, றில்வன், நினுஜா, ஜேசுகி,றொபின்சன், ஜெலினா, ஜெகிதனா, மலர்விழி, நிலூஜி, நிறாஜ், நிலுக்சி, நிதூர்சனா, சலூஜா, சன்சிகா, சனத், சாயிரா, சல்ற்ரன், வேர்ஜினி, கிளேமோ, அத்ரியன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (15.05.2006) திங்கட்கிழமை தேவர்கட்டு திருஇருதயநாதர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, பூதவுடல் நவாலி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கற்கேணியடி,
நவாலி வடக்கு, மானிப்பாய்.

தகவல்:
மனைவி,
பிள்ளைகள், மருமக்கள்.
(50197)

ஒன்பதாம் ஆண்டு நினைவுகளில்...

அன்னை மடியில்
07 - 12 - 1926

ஆண்டவன் அடியில்
14 - 05 - 1997

திருமதி **புவனேஸ்வரி அரியதுரை**

உலக அன்னையர் தினம் இன்று
எம் அன்னையின் தினமும் இன்று
ஆண்டுகள் ஒன்பது சென்றாலும்
உன் நினைவுகள் நீங்காது தாயே!

சென்.பெனடிக்ற் வீதி,
அரியாலை.
(50188)

என்றும் நினைவுகளுடன்:
கணவர்,பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டன்.

அந்தியேட்டி வீட்டுக் கிருத்திய அழைப்பு

தோற்றம்
15 - 03 - 1964

மறைவு
15 - 04 - 2006

அமரர் **மகேந்திரன் யோகலக்ஷ்மி**(செல்வதி)

15.04.2006 அன்று அமரத்துவம் அடைந்த எமது குலவிளக்கின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு நாளை (15.05.2006) திங்கட்கிழமை அன்னாரின் தாயார் இல்லத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரையும் கலந்துகொண்டு அவரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

உடுவில் கிழக்கு,
இணுவில். (50192)

தகவல்
மகள்,மருமகன்.

31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மண்ணில்
20 - 01 - 1937

விண்ணில்
13 - 04 - 2006

அமரர் K.V.**வேலுப்பிள்ளை**(தவம்)

(ஓய்வுபெற்ற உணவுக் கட்டுப்பாட்டு திணைக்கள உத்தியோகத்தர்)

எங்கள் அன்புத் தெய்வமே!
உங்களின் அன்பு நினைவுகள்
என்றென்றும் எங்கள் நெஞ்சங்களில்
வாழ்ந்துகொண்டிருக்கும்.

அன்னாரின் பிரிவுச் செய்திகேட்டு நேரிலும் தொலைபேசியிலும் மற்றும் பல வழிகளிலும் உதவிகள் புரிந்த அனைவருக்கும் எமது நன்றிகள்.

அத்துடன் அன்னாரின் இல்லத்தில் இன்று (14-05-2006) ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பழைய வீதி,
கோப்பாய் தெற்கு. (சி-49255)

குடும்பத்தினர்

கூட்டம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,மே14

கோப்பாய் கிறிஸ் தவக் கல்லூரியில் இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெற விருந்தபழைய மாணவர் சங்கப் பொதுக் கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகப் பழைய மாணவர் சங்கத் தலைவர் அறிவித்துள்ளார்.

வழக்கம்பரையில் முதியோர் இல்லம்

சுழிபுரம்,மே14

சிவபூமி அறக்கட்டளை சார்பில் முதியோர் இல்லம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அறக்கட்டளைப் பொறுப்பாளர் ஆறுதிருமுருகன் தெரிவித்தார்.

வழக்கம்பரையில் மின் நெசவு இயங்கிவந்த கட்டடத்தில் முதியோர் இல்லத்தை செயற்படுத்தத் திட்டமிட்டுள்ளதாகவும் அவர் கூறினார். (28)

தீர்வை

மாவட்ட நீதிமன்றம் - யாழ்ப்பாணம்

கதிரவேலு தில்லைநாதன்
பெண் சுமதி
மே/பா திருமதி எம்.பாக்கியநாதர்
2, முருகன் ஒழுங்கை,
திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.
- வழக்காளி

வழ.இல.: மணநீக்கம்/631

எதிராக
கதிரவேலு தில்லைநாதன்,
அல்வாய் கிழக்கு, அல்வாய்.
- எதிராளி-

இவ்வழக்கு 2006 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 30 ஆம் திகதி யாழ்ப்பாண மாவட்ட நீதிபதி இ.த.விக்னராஜா அவர்கள் முன்னிலையில் வழக்காளியும், வழக்காளி சார்பில் பதிவுபெற்ற சட்டத்தரணி திருமதி பவானி சற்குணராசா ஆஜராகி இருக்கவும் இவ்வழக்கில் இன்று எதிராளி சமுகம் இல்லாமையால் ஒருமுக விளக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு,

வழக்காளியின் பிராது, வ1, வ2, வ2அ ஆகிய ஆவணங்களையும் வழக்காளியின் சாட்சியத்தையும் வழக்கேட்டுடன் சேர்த்துப் பரிசீலித்து வழக்காளி பிராதில் கோரிய நிவாரணங்களைப் பெறத் தகுதியுடையவர் எனக் கண்டு, வழக்காளியை எதிராளி 24-06-2001 இல் பதிவுத் திருமணம் செய்ததன் நேரத்தில் இவ்வெதிராளி 16-09-1999இல் திலகராணி என்ற பெண்ணை வ2 ஆவணம் மூலம் பதிவுத் திருமணம் செய்தமையால் எதிராளி வழக்காளியுடன் 24-06-2001 இல் செய்த பதிவுத் திருமணம் வெற்றும் வெறிதுமாகுமென பிரகடனப்படுத்தி இதனால் கட்டளை பிறப்பிக்கப்பட்டு தீர்வையிடப்படுகிறது.

எனவே, வழக்காளி தன் கன்னிப் பெயரைப் பாவிக்கவும் . திருமணமாகாத ஒரு பெண்ணுக்குரிய சகல உரிமைகளையும் அனுபவிக்கலாமெனவும் இதனால், கட்டளை பிறப்பிக்கப்பட்டு தீர்வையிடப்படுகின்றது.

2006 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 30 ஆம் திகதி
மாவட்ட நீதிபதி

வரைவு
வழக்காளியின் சட்டத்தரணி

மேற்படி எதிராளிக்கு,

இவ்வழக்கில் மேற்குறித்தவாறு தீர்வை பதியப்பட்டிருப்பதனால் அதற்கு உமக்கு மன்று ஏற்றுக்கொள்ளக்கூடிய தகுந்த ஆட்சேபனை ஏதாவது இருப்பின் இது இப்பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டு 14 நாள்களுக்குள் மன்றில் தோன்றித் தெரிவிக்கும்படி இதனால், அறிவிக்கப்படுகிறது.

2006 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 04 ஆம் திகதி
- மன்றின் கட்டளைப்படி-
பதிவாளர்
மாவட்ட நீதிமன்றம் யாழ்ப்பாணம்

வரைவு
வழக்காளியின் சட்டத்தரணி (50199)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரிந்துணர்வு உடன்படிக்கையின் அடிப்படையில்

விடுதலைப் புலிகளுக்கு மறுக்கப்பட்ட எதனையும் அரச படைகளுக்கு வழங்குவதை ஏற்கமுடியாது

கண்காணிப்புக் குழுத் தலைவரிடம் அரசியல்துறைப் பொறுப்பாளர் வலியுறுத்து

கிளிநொச்சி,மே14

விடுதலைப் புலிகளுக்கு மறுக்கப் பட்டஎதனையும் கண்காணிப்புக்குழு அரச படைகளுக்கு வழங்குவதை ஏற்கமுடி யாது.

- இவ்வாறு கண்காணிப்புக் குழுத் தலைவர் உல்ப் ஹென்றிக்சனிடம் விடு தலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் வலி யுறுத்தியுள்ளார்.

வடமராட்சி கடற்பரப்பில் கடந்த வியா ழக்கிழமை நடந்த கடற்சமரில் இலங்கைக் கடற்படையினரின் 'டோறா' படகு மூழ்க டிக்கப்பட்ட. இச்சம்பவம் குறித்து கண்கா ணிப்புக் குழுவிடுத்த அறிக்கையில் கடல் மற்றும் வான் பிராந்தியத்தைப் பயன்ப டுத்த விடுதலைப் புலிகளுக்கு உரிமை யில்லை என்று சாரப்பட குறிப்பிடப்பட் டிருந்தது.

இவற்றின் பின்னணியில் கண்காணிப் புக் குழுத் தலைவர் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளரை நேற்று முன்தினம் கிளிநொச்சியில் சந்தித்தார்.

இச்சந்திப்பின் பின்னர் செய்தியாளர்க ளுக்கு அரசியல்துறைப் பொறுப்பாளர் செவ்வியளித்தார். அந்தச் செவ்வியின் முதற்பகுதி நேற்றைய உதயனில் பிரசுர மாகியிருந்தது. மிகுதிப் பகுதி இங்கு வெ ளியிடப்பட்டுள்ளது.

கே:- தனது எல்லைக்கு அப்பால் சென்று கண்காணிப்புக்குழு இத்தகைய அறிக்கைகள் விடுவதற்கு என்ன காரணம்?

ப:- கண்காணிப்புக் குழுத் தலைவருக்கு விளக்கமின்மை இருக்குமோ தெரியவில்லை. விடயங்களை ஆரம்பத்திலிருந்து தெளி வாக விளக்கியிருக்கின்றோம். இலங்கைப் படைகள் தமிழர் தாயகத்தை முற்றாக ஆக்கிரமித்து, எமது மக்களை முற்றாக அழிப்பதற்கு முயற்சி எடுத்தவேளையில் தான் எமது மக்கள் எமது தலைமைக்குப் பின்னால் அணிவகுத்துப் போராடி - எமது பெருமளவு நிலப்பகுதியை - மீட்டெடுத்து இராணுவ வெற்றிகளைப் படைத்து - நடைமுறை அரசையே இங்கு நடத்துகின்ற வலிமையைப் பெற்றிருக்கின்றார்கள்.

இதன் பின்புதான் இலங்கை அரசு எமது படைவலுச் சமநிலையை அங்கீக ரித்து - பேச்சுவார்த்தைக்கு வந்தது. அந்த அடிப்படையில்தான் யுத்த நிறுத்த உடன் படிக்கை உருவானது. யுத்தநிறுத்த உடன் படிக்கையில் எம்மை ஓர் ஆயுதக்குழுவா கவோ வேறு ஒரு சொற்பதத்திற்குரியதா கவோ குறிப்பிடவில்லை.

இரு தரப்புக்கள் என்பதுதான் அங்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறை. இதை ஏற்றுக்கொண்டுதான் பேச்சுவார்த்தை பல கட்டங்களாக நடைபெற்றது. அந்நிலைமை யைக் கொச்சைப்படுத்தும் - சீர்குலைக் கும் வகையில் அறிக்கை விடுவதற்கு கண் காணிப்புக் குழுவிற்கு எந்த அதிகாரமும் இல்லை என்பதைச் சுட்டிக் காட்டியிருக்கின் றோம். எந்த அடிப்படையில் அமைதிப் பேச்சுக்கள் தொடங்கப்பட்டன என்ற வரலாற் றைக்கூட அவர்களுக்கு விரிவாக எடுத்துக் கூறியிருக்கின்றோம்.

கே:- கண்காணிப்புக்குழு கடற்படையில் படகில் பிரசன்னமாகியிருந்தது குறித்து...?

ப:- அது பாராதூரமான தவறு என்பதைச் சுட்டிக்காட்டியிருக்கின்றோம். அவர் இதற் குப் பதில் கூறமுடியாமல் திகைத்தார். மௌனமாக இருந்தார். எமது போராளிக ளின் - தளபதிகளின் - போக்குவரத்திற்கு கண்காணிப்புக் குழு வழித்துணை வழங்கி யதா? கண்காணிப்புக்குழு என்பது இரு தரப்பையும் சமதரப்பாக ஏற்றுக் கொண்டு யுத்த நிறுத்த உடன் படிக்கையில் உள்ள அம்சங்களின் அடிப்படையில்தான் செயற்பட வேண்டும். அதற்குத்தான் அங்கீகாரம் இருக்கின்றது. இதை மீறி கண்காணிப்புக் குழு செயற்படமுடியாது. ஆகவே கடற் படையினரின் படகில் ஏறி விடுமுறையில் செல்லும் கடற்படையினருக்குப் பாதுகாப்பு வழித்துணை வழங்குவதை ஏற்றுக்கொள்ள முடியாது. விடுதலைப் புலிகளுக்கு மறுக் கப்பட்ட நிலையில் கண்காணிப்புக்குழு அதை அரச படைகளுக்கு வழங்குவதை ஏற்றுக்கொள்ளமுடியாது.

தென்தமிழீழத்திலிருந்து வடதமிழீழத் திற்கு எமது போராளிகள், தளபதிகள் வருவதற்கு உங்கள் கண்காணிப்பு அதி காரிகளை அனுப்புங்கள் எனக் கண்காணிப் புத் தலைவரிடம் கேட்டிருக்கின்றோம். எமது பயணத்திற்கு வழித்துணையும் பாதுகாப் பும் வழங்குவதை உடனடியாகச் செய்ய வேண்டும். அரசதரப்பிற்கு செய்வதானால் விடுதலைப் புலிகளுக்கும் செய்ய வேண்டும்.

யுத்த நிறுத்த உடன்படிக்கையின்படி இரு தரப்பையும் சமமாக பார்த்துத்தான் கண்காணிப்புக் குழுவின் நடவடிக்கைகள் அமைய வேண்டும். தீர்ப்பு வழங்குவதிலும் வழித்துணை வழங்குவதிலும் சம மாக நாம் நோக்கப்பட வேண்டும். இதில் ஒரு தலைப்பட்சமாகவும் பாரபட்சமாகவும் நடந்து கொள்வதைப் பாரதூரமான விடயமாகவே கருதுகின்றோம்.

கண்காணிப்புக் குழு நேற்று (வியாழக் கிழமை) வெளியிட்ட அறிக்கை மிகத் தவறு. அதற்கு உடன் பதில் தர வேண்டும் என்று நாம் கேட்டதற்கு தாங்கள் அனுசர ணையாளருடன் தொடர்புகொண்டு பதில் தருவார்கள் என அவர்கள் கூறியுள்ளார் கள். மக்களைக் கொன்று கொண்டு இருக் கும் படையினருக்கு நீங்கள் பாதுகாப்பும் வழித்துணையும் வழங்குகின்றீர்கள். குண்டு வீச்சு விமானங்கள் வந்து குண்டுகளை வீசுகின்றன. எறிகணைத் தாக்குதல்களை யும், கடலிருந்து பீரங்கித் தாக்குதல்களை யும் மேற்கொள்ளுகின்றார்கள். இவற்றைத் தடுப்பதற்கு ஏன் காண்காணிப்புக்குழு முயல வில்லை.?

ஜெனீவாப் பேச்சுக்களுக்குப் பின்னர் 160க்கும் மேற்பட்ட மக்கள் வீதி வீதியாகச் சுட்டுத் தள்ளப்பட்டுள்ளர்கள். நாளாந்தம் படையினரால் கடத்தப்பட்டு காணாமல் போயிருக்கின்றார்கள். கொல்லப்பட்டிருக் கின்றார்கள். திருகோணமலையில் முப் படையினரும் பார்த்துக்கொண்டிருக்க வன்முறைக் கும்பல்கள் எமது மக்களைக் கொல்லுகின்றன. சொத்துக்களை அழிக் கின்றன. கண்காணிப்புக்குழு அங்கிருக்கி றது. பாதுகாப்புக் கருதி வெளியில் செல்ல முடியாது என்று கூறுகின்றது. இவ்வாறு கொல்லுகின்ற படைகள் செல்வதற்கு பாது காப்பு வழங்குவது எவ்வகையில் நியாயமா னது என்று கேட்டோம். இதற்குப் பதில் சொல்ல முடியாது திணறினார்.

நாம் மிகவும் இறுக்கமாக எமது நிலைப் பாட்டை முன்வைத்திருக்கிறோம். மக்கள் கண்காணிப்புக் குழு தொடர்பாக கொந்த ளிப்பான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார் கள். எமது மக்களும் தலைமைப்பீடமும் மிகவும் அதிருப்தி அடைந் திருகின்றார்கள். கண்காணிப்புக் குழுவிடம் இன்று எமது கண்டனத்தைத் தெரிவித்திருக்கின்றோம்.

கே:- இதுவரை இருந்த போர் நிறுத்த கண்காணிப்புக்குழுத் தலைவர்களில் இருந்து புதிதாக வந்திருப்பவரில் வித்தியாசம் என்ன?

ப:- புதிதாக வந்த தலைவருக்கு விளக்க மின்மைகள் இருந்திருக்காலம். அவருக்கு ஆரம்பத்திலிருந்து செயலாற்றியவர்கள் பற்றி விவரமாக விளக்கியிருக்கின்றோம். அவர்கள் புலிகளுக்கு சொந்தமான கடற் பரப்பில் புலிகள் பயணம் செய்வதற்கு, பயிற்சியில் ஈடுபடுவதற்கு உரித்திருக்கின் றது என்று கூட ஓர் ஆலோசனையை முன் வைத்திருந்தார்கள். அந்த நடைமுறைக ளைப் புறந்தள்ளி யுத்த நிறுத்த உடன்படிக் கைக்கு மாறாக அறிக்கைகளை விடுவதை யும் தீர்ப்பு வழங்குவதையும் கண் காணிப் புக் குழு தவிர்க்கவேண்டும் என்று கடுமை யான தொனியில் [illegible]

கே- அனுசரணையாளர்களின் நிலை என்ன?

ப:- அனுசரணையாளர்களிடமும் இதை முறையிட இருக்கின்றோம். யுத்த நிறுத்த உடன்படிக்கைகள். அமைதி முயற்சிகள் அனைத்தையும் தகர்க்கின்ற அறிக்கை இதுவாகும். இதற்குத் தீர்க்கமான பதில் தரவேண்டு மென்று அவர்களிடம் கேட்க விரும்புகின்றோம்.

கே:- ஸ்ரீலங்கா படையினரால் நடத் தப்பட்ட விமானத் தாக்குதல் குறித்து...?

ப:- கடலில் நடத்த சம்பவத்திற்கு விடு தலைப் புலிகள் மீது குற்றம் சுமத்தி அவசர மாக அறிக்கை வெளியிட்டார்கள். திருகோண மலையிலும் வன்னியிலும் குண்டு வீச்சு விமானங்கள் வந்து தாக்குவது உங்க ளுக்கு யுத்த நிறுத்த மீறலாக தெரியவில் லையா என்று கேட்டோம். கண் காணிப்புக்குழு இரட்டை நிலைப்பாட்டை எடுத்திருக்கின்றதா என்ற சந்தேகமும் எழு கின்றது. ஒரு காலத்தில் இந்த குண்டு வீச்சு விமானங்கள் முழு வதையும் முற் றாக அழித்திருந்தோம். இந்த சமாதான காலத்தை பயன்படுத்தி தங்களுடைய படை களை கட்டியெழுப்பி எமது மக்களை கொல்லும் நடவடிக்கையை தென்னிலங் கைச் சிங்களம் முடுக்கி விட்டிருக்கின்றது.

கே:- இத்தகைய செயற்பாடு அடுத்த கட்ட நடவடிக்கைக்கு தள்ளுமா?

ப:- நிச்சயமாக தள்ளும். மிக விரை வில் அடுத்த கட்ட நடவடிக்கைக்கு தள் ளக்கூடிய ஆபத்து இருக்கின்றது. சர்வதேச சமூகத்திற்கு இதை தெளிவாக்கிக் கொண் டிருக்கின்றோம். தமிழ் மக்களும் எமது தலைமையும் மிகவிரைவில் ஒரு தீர் மானத்தை எடுப்பார்கள். அனுசரணையாளர் களுடன் தொடர்பு கொண்டிருக்கின்றோம். மிக விரைவில் சந்தித்து எமது நிலைப்பாட் டைத் தெரிவிப்போம்.

கே- அண்மை நாட்களாக, தொடர்ச் சியாக தாக்குதல்கள் நடந்து வருகின்றன. அனுசரணையாளர்கள் இந்தக் காலத்தில் வரவில்லை. எத்தகைய தொடர்புகளை அவர்களுடன் வைத்திருக்கின்றீர்கள்?

ப:- நாங்கள் வேறு மாற்றங்கள் ஊடாக தொடர்சிச்சியாகத் தொடர்புகளைப் பேணி வருகின்றோம். எமது அதிருப்திகளை - நிலைப்பாடுகளை - தெளிவுபடுத்தி வரு கின்றோம். எமது மக்களையும் எமது குரல் வளையையும் நெரித்துக்கொண்டு பேச் சுக்கு செல்லுமாறு சர்வதேச சமூகம் கேட் பது அர்த்தமற்றது என்பதை கண் காணிப்புக் குழுவிற்கு தெரிவித்திருகின் றோம்.

ஒரு சம்பவம் நடைபெறும்போது நீங்கள் உங்கள் கண்காணிப்பாளர்கள் அனை வரையும் அழைத்து ஆலோசித்து தீர்மானம் எடுக்கின்றீர்கள் என்றால் எமது கிழக்கு மாகாண தளபதிகள் - தமிழீழத்தின் தளபதிகள் - தலைமைப்பீடத்துடன் கலந்து ஆலோசித்து தீர்மானம் எடுக்காமல் எவ்வாறு பேச்சுவார்த்தைக்கு செல்ல முடி யும் என்று அவரிடம் கேட்டிருந்தோம். ஒரு தாரண விடயத்திற்கு ஸ்ரீலங்கா அரசு நெருக்கடிகளை ஏற்படுத்தி நிலைமையை சீர்குலைத்து வைத்திருக்கின்றது.

ஜெனீவாப் பேச்சுக்களுக்கு செல்ல முன்னர் எரிக்சொல்ஹெய்ம் எமது தேசியத் தலைவரைச் சந்தித்த பின்னர் தாயகப் பிரதேசத்தில் படையினரின் வன்முறைகள் கட்டுப்பாட்டுக்குள் வந்தன. மக்கள் கூட அமைதிகாத்தார்கள். ஜெனீவாப் பேச்சு வார்த்தை முடிந்ததன் 'பின்னரும்' மிக இறுக்கமாகவே அமைதி காத்தார்கள். அந்த நிலையில் இலங்கைப் படைகள் ஒட்டுக் குழுக்களைக்கொண்டு வந்து போராளிகள் மீதும் எமது நிலைகள் மீதும் தாக்குதல் நடத்தினார்கள். அதன் மோச மான விளைவாக பெரிதும் மதிக்கப்பட்ட திருகோணமலையின் மக்கள் பேரவைத் தலைவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.அதன் பின்னர்தான் எமது மக்கள் கொந்தளிப்பான நிலைக்கு தள்ளப்பட்டார்கள். அதுவரையும் எமது மக்களும் நாமும் எவ்வளவுக்குப் பொறுமை காத்தோம் என்பது சர்வதேசத் திற்கும் தெரியும். இந்த நிலைமையை சீர்குலைத்தது மஹிந்த ராஜபக்ஷ அரசு. ஆகவே மஹிந்த அரசை சர்வதேச சமூகம் சரியான வழிக்குக் கொண்டுவர உதவ வேண்டும். அல்லாவிட்டால் நிலைமைகளை சீராக்க முடியாது. அண்மைக் காலத்தில் மஹிந்த அரசின் நடவடிக்கைகள் யுத்த சூழலுக்கு எம்மையும் மக்களையும் வலிந்து தள்ளுவனவாகவே இருக்கின்றன.

எமது போக்குவரத்துக்களை தடுத்துக் கொண்டு ஸ்ரீலங்கா அரசாங்கம் தமது படைப போக்கு வரத்தைச் செய்யமுடியாது. எமது கடல் பிராந்தியத்திற்கு ஊடாக அவர்கள் விடுமுறையில் செல்லுகின்றார்கள். அவர் களின் கடற்கலங்கள் சுதந்திரமாக நட மாடுகின்றன. போர் ஒத்திகைகள் செய்கின் றார்கள். இந்த நிலையில் எமது கடற் படையை முடக்கி வைத்திருக்க முடியாது. எமது போக்குவரத்து, சுதந்திரமான நட மாட்டம் உருவாகும்வரை இலங்கைப் படை களுக்கும் அதை நாம் அனுமதிக்க போவ தில்லை.

யுத்த நிறுத்த உடன்படிக்கையின்படி இரு தரப்புக்கும் உரியவை எவையென்று எழுதப்பட்டிருகின்றது. போக்குவரத்துக்குச் சுதந்திரமான நடமாட்டம், சமதரப்பு என்பன எல்லாம் யுத்த நிறுத்த உடன்படிக்கையில் எழுதப்பட்டிருக்கின்றன. யுத்த நிறுத்த உடன் படிக்கையை வரிக்குவரி - எழுத்துக்கு எழுத்து - கவனமாக வாசித்துப்பாருங்கள் என்று கண்காணிப்புக்குழுத் தலைவருக்கு சுட்டிக் காட்டியுள்ளோம். இந்த விடயம் எமது தரப்பில் எவ்வளவுக்கு நடை முறைப் படுத்தப்பட்டிருகின்றது, அரச தரப்பில் - படைத்தரப்பில்- எவ்வளவுக்கு நடைமுறைப் படுத்தப்பட்டிருக்கின்றது என்று நீங்கள் அளவீடு செய்து பாருங்கள் என்று கூறியி ருக்கின்றோம்.

இங்கே நடைபெறுகின்ற யுத்த நிறுத்த மீறல்கள் எந்த அடிப்படையில் நடக்கின் றன என்பதை புரிந்து கொள்வீர்கள் என்று கூறியிருக்கின்றோம். அதில் கூறப்பட்டிருக் கும் எந்த விடயத்தையும் இலங்கை அர சாங்கமோ படைத்தரப்போ மதித்து நடக்க வில்லை என்பதுதான் பாரதூரமான விடயம். இதை விடுத்து யுத்த நிறுத்த மீறல்கள் பற்றி கதைப்பதில் அர்த்தமில்லை. யுத்த நிறுத்த உடன்படிக்கையை முழுமை யாக அமுல்படுத்த சகல தரப்பிற்கும் நீங் கள் அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று கண்காணிப்புக் குழுவிற்கு தெரியப்படுத்தி யிருகின்றோம்.

சர்வதேச சமூகம் அழுத்தத்தை பிர யோகிக்கட்டும். அதைவிடுத்து வெறும் அறிக்கை விடுவதில் அர்த்தமில்லை. செஞ் சிலுவை சர்வதேச குழு, ஐ.நா அமைப்பு, மனித உரிமைகள் அமைப்பு என பல அமைப்புகள் இங்கே அறிக்கை விடுவதற்கு இருக்கின்றன. யுத்த நிறுத்த உடன்படிக்கை யின் அம்சங்களை, அதில் உள்ள விதி முறைகளை அமுல்படுத்துகின்ற பொறுப்பு கண்காணிப்புக் குழுவிடம் உள்ளது.

இதில் தீர்க்கமான முடிவு எடுக்க வேண்டு மென்பதை கண்காணிப்புக் குழுவிடம் தெரி வித்திருக்கின்றோம்.

கே:- திருகோணமலையில் ஸ்ரீலங்கா அரசாங்கம் மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டது போர் நிறுத்தத்திலிருந்து விலகும் பதினாங்கு நாள் என்ற விதிமுறையை மீறிய சம்பவம் அதுவாகும். எனவே இனியும் பதினான்கு நாட்கள் முன்னறிவித்தல் என்பது பொருள் உள்ளதாக இருக்குமா?

ப:- இலங்கை அரசும் படைகளும் யுத்த நிறுத்திற்கு முரணாக செயற்படுகின்ற போது - சில நடவடிக்கைகளை மே

(09ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊடகங்களை தாக்குவோர் உண்மையை விரும்பாதவர்கள்

ஊடகங்கள் இன்றைய காலகட்டத்தில் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தவையாக மாறியுள்ளன. குறிப்பாக இன்றைய கால கட்டத்தில் உலகின் பெரும்பாலான நாடுகளின் ஜனநாயக ஆட்சி நிலவுகின்ற நிலையில் அந்த ஜனநாயகத்தை தாங்கிப்பிடிக்கின்ற முக்கிய தூண்களாக இந்த ஊடகங்கள் மாறியுள்ளன. அதேபோல உலகின் பெரும்பாலான நாடுகளில் இந்த ஊடகங்களின் முக்கியத்துவம் உணரப்பட்டு அவற்றிற்கு சுதந்திரமும், செய்தி சேகரிப்பதற்கான பூரண வசதிகளும் வழங்கப்பட்டுள்ளன. அதனடிப்படையில் தான் இவ்வருடமும் சர்வதேச ஊடக சுதந்திர தினம் கொண்டாடப்பட்டது.

எனினும் இலங்கையில் இவ்வருட ஊடக சுதந்திர தினம் வழமையை விட மிக மோசமாகவே அமைந்தது. யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் முன்னணி பத்திரிகையான உதயன் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூடே இதற்கு காரணமாக அமைந்தது. இத்தாக்குதலில் இருவர் கொல்லப்பட்டதுடன் சொத்துக்களுக்கும் சேதம் விளைவிக்கப்பட்டது.

இலங்கையில் ஊடகத்துறையின் மீதான தாக்குதல் மிக நீண்ட காலமாகவே இடம்பெற்று வருகின்றது. ரிச்சட் டி சொய்சா போன்றோர் கொண்டிருந்த அரசியல் கருத்துக்காக கொல்லப்பட்டனர்.

எனினும், இனப்பிரச்சனையை அடிப்படையாகக் கொண்டு தமிழ் பத்திரிகையாளர்கள் தொடர்ந்தும் வன்முறைகளுக்கும், கெடு பிடிகளுக்கு ஆளாகி வருகின்றனர். அண்மையில் கொழும்பிலும், தினக்குரல், சுடரொளி பத்திரிகைகள் மீது கெடுபிடிகளும், வன்முறைகளும் பிரயோகிக்கப்பட்டிருந்தன. தினக்குரல் பத்திரிகையாளர்கள் கைது செய்யப்பட்டு குற்றவாளிகளைப் போல நடத்தப்பட்டிருந்தனர். மேலும், 2000ம் ஆண்டில் கொல்லப்பட்ட யாழ்ப்பாண ஊடகவியலாளர் நிமலராஜன், கிழக்கு ஊடகவியலாளர் நடேசன், சர்வதேச ஊடகவியலாளர் சிவராம் போன்றோரது கொலைகள் இனப்பிரச்சனையை அடிப்படையாகக்கொண்டே இடம்பெற்றுள்ளமை உலகறிந்த உண்மையாகும்.

– ஜீ. யோகப்பிரியா

தற்போது வடகிழக்கில் வன்முறைகள் மிக மோசமாக அதிகரித்துக்கொண்டு வருகின்றமையை காணமுடிகிறது. படையினர் மீதான கிளைமோர் தாக்குதல்கள், பொதுமக்கள் மீதான தாக்குதல்கள், படுகொலைகள் மற்றும் விடுதலைப்புலிகளின் பிரதேசத்திற்குள் ஊடுருவி இடம்பெறும் கொலைகள் என வன்முறைகள் பெரும் அதிகரிப்பினைக் கண்டுள்ளன.

இவ்வாறான ஆபத்தான நாட்டுச் சூழலில் தமிழ் ஊடகவியலாளர்களின் பணி மிக ஆபத்தானதாகவே இருக்கிறது. கடந்த மே மூன்றாம் திகதி நிப்பொன் ஹோட்டலில் வெளியிட்டு வைக்கப்பட்ட தெற்காசிய ஊடகவியலாளர்களின் அறிக்கையும் இதனையே தெரிவித்து நிற்கின்றது. தெற்காசியாவில் ஊடகவியலாளர்களுக்கு முதலாவது ஆபத்தான நாடாக இலங்கை காணப்படுவது இதன் மூலம் வெளிப்படுகிறது.

எவ்வாறெனினும் ஊடகவியலாளர்கள் மீது வன்முறை பிரயோகிக்கப்படும் போது அவர்களால் அதற்கு எதிராக ஆர்ப்பாட்டங்களை நடத்த மட்டுமே முடியும். கருத்துக்களை கருத்துக்களால் எதிர்கொள்ளாமல் எழுதுகோலுக்கு எதிராக துப்பாக்கியை பிரயோகிப்பதானது இந்த நாடு எத்தகைய மிலேச்சத்தனமான நிலையில் உள்ளது என்பதற்கு எடுத்துக்காட்டாகும்.

ஊடகவியலாளர்கள் மீது இடம்பெறுகின்ற இந்த வன்முறைகள் உண்மையை விரும்பாத, உண்மையை மறைக்க விரும்புகின்றவர்களின் கொடூரமான செயற்பாடுகளே என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. இந்த வன்முறைகளை நிறுத்தி சுதந்திர ஊடக செயற்பாட்டிற்கு ஆதரவு வழங்க வேண்டிய கடமை அரசாங்கத்திற்கு உண்டு. இந்த கடமையிலிருந்து அரசாங்கம் தவறும் பட்சத்தில் பெரும் பழியை சுமக்க வேண்டி நேரிடும்.

கருத்தாடல் களம்

தயவு செய்து வன்முறைகளை நிறுத்துங்கள்

தொடருகின்ற வன்முறைகள் மக்களாகிய எம்மை மிகவும் துன்பத்துள் தள்ளியுள்ளது. எங்களால் அன்றாட நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியவில்லை. பாடசாலைகளுக்கு பாதுகாப்பாக அனுப்ப முடியவில்லை. வேலைக்கு செல்லுபவர்கள் மீண்டும் வீடு வந்து சேர்வார்களா என்பது கேள்விக்குரியதாகியுள்ளது. எனவே எமது துயரத்தை உணர்ந்து தயவு செய்து வன்முறைகளை நிறுத்தும்படி மக்களாகிய நாம் சகல தரப்பினரையும் வேண்டுகிறோம்.

கே. காருண்யா
வடமராட்சி

முஸ்லிம் அரசியல்வாதிகளுக்கு ஒரு வேண்டுகோள்

முஸ்லிம் சமூகம் அரசியல் கட்சி ரீதியாக பிரிந்து சிதறிக் கிடக்கிறது. அரசியல்வாதிகள் ஒவ்வொரு கருத்தினை வைத்துக் கொண்டு தமது மக்களை பிரித்தாளுகின்ற போக்கையே காணமுடிகிறது. சில அரசியல்வாதிகள் முஸ்லிம்களின் உரிமைகளுக்காக குரல் கொடுப்பது போல காட்டிவிட்டு கொழும்பில் சுகவாழ்வு வாழ்கிறார்கள். இன்னும் சிலர் வட கிழக்கை பிரிக்க வேண்டுமெனக்கூறி பேரினவாதிகளின் செல்லப் பிள்ளையாக முயற்சிக்கிறார்கள். இவர்களால் எமக்கு எந்த இலாபமும் இல்லை. எனவே தயவு செய்து முஸ்லிம் அரசியல்வாதிகளே ஒன்றுபடுங்கள் மக்களுக்கு பாடுபடுங்கள்

எம். றிஸ்லி அகமத்
மருதமுனை

யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு குரல்

கடந்த 2002ம் ஆண்டு யுத்த நிறுத்த உடன்படிக்கையினைத் தொடர்ந்து மக்களின் வாழ்விலும் மனதிலும் ஓர் புத்துணர்வு தோன்றி கடந்த 2005ம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலும், இன மதவாத போக்குடையவரும் ஆட்சி மாற்றமும் இதில் சரிவினை ஏற்படுத்தும் முனையாகியது.

இன்று யாழ் மக்களின் வாழ்வு என்பது கேள்விக்குறியாகிவிட்டது. சந்திக்கு சந்தி என்று நின்ற ராணுவம் தற்போது ஒழுங்கைக்குள்ளே எல்லாம் நின்று வழிமறிக்கின்றனர். இதனை விட ஊரடங்குச் சட்டம் சொல்தான் இங்கில்லை ஆனால் அதன் இயல்பினை அவதானிக்க முடிகின்றது. தற்சமயம் இரவு 7 மணி தாண்டினால் வீதிக்குவர அச்சத்தில் தமது கடமைகளை சுருக்கமாக்கி விட்டு வெகு விரைவில் வீடு சேர்கின்றனர். ஆனால் வீட்டில் மட்டும் பாதுகாப்பு உள்ளதா என்றால் இல்லை. இரவில் கள்வர்களின் பயம். என்ன ஆச்சரியம் ராணுவம் தான் றோட்டுக்கு றோட்டு நிற்கின்ற போது கள்ளர் நடமாட்டமா? இதுதான் வேலி பயிரை மேயும் கதை.

அடுத்து யாழ் மக்களின் மனநிலையினை நோக்கின் இயல்பாகவே மனமானது எதிர்நிலை தன்மை பற்றி சிந்திக்கும். இதே போல் மக்களின் மனமும் இவ்விரு எதிர்நிலைப்பட்டதாக காணப்பட்டாலும் அதன் தன்மை என்பது அதிகம் அதாவது போரா? சமாதானமா? சாவா ? சகவாழ்வா? என்று வாழ்வது கூட உரிமையற்ற வகையில் ஏங்கும் நிலை காணக்கூடியதாக உள்ளது.

வெளியில் சென்ற கணவன், பிள்ளைகள் வீடு திரும்பு மட்டும் மனைவிக்கும், வெளியில் சென்றவர் தான் வீடு திரும்பும் மட்டும் அவருக்கும் அச்ச உணர்வு. எங்கே சூடுவிழும், எங்கு கிளைமோர் வெடிக்கும், எங்கு ராணுவம் அடிக்கும் என்ற சிந்தனை தான். இதனால் மனிதனுக்கு நோய்தான் ஏற்படும் நிலை காணப்படுகின்றது.

எனவே, சமாதான விரும்பிகளாக நீங்கள் காணப்படாவிட்டாலும் போரினை மட்டும் விரும்பாதவர்களாக அனைவரும் இருக்க முயற்சி செய்யுங்கள். குறிப்பாக அரசியல்வாதிகளே நீங்கள் தான் மேற்குறிப்பிட்ட வகையில் வாழப்பழகுங்கள்.

சிந்தனை
யாழ்ப்பாணம்

அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனம்

உறுப்புரை – 26 (தொடர்ச்சி)

2. கல்வியானது மனிதனின் ஆளுமையை முழுமையாக விருத்தி செய்யவும்,மனித உரிமைகளுக்கும் அடிப்படை சுதந்திரங்களுக்குமான மரியாதையை வலுப்படுத்தவும்கூடியதாக ஆற்றுப் படுத்தப்படல் வேண்டும். அது சகல நாடுகளுக்கிடையேயும் இன அல்லது மதக்குழுவினருக்கிடையேயும் மன ஒத்திசைவு, பொறுதியுணர்வு, தோழமை ஆகியவற்றை மேம்படுத்துதல் வேண்டுமென்பதுடன், சமாதானத்தை பேணுவதற்காக ஐக்கிய நாடுகள் சபையின் முயற்சிகளை மேற்கொண்டு செல்லுவதற்குதவும் வேண்டும்.

கலந்துரை சிறையிலிருந்து

சமர்ப்பணம்

பலராலும் வேண்டப்படுவது
வலுவிழந்து போகிறது
வேண்டா வெறுப்பாய் நேசித்து
உலக அரங்கில் நாடகமாடும்
ஒரு சிலரால் இது
செத்துக் கொண்டிருக்கிறது
குற்றுயிருடன்
இனவாதிகளின் நரகல் கரங்களினுள்
கிடந்து சாகும் இது
தேவை கருதி
அவ்வப்போது
உயிர்த்துக் கொள்கிறது

எத்தனை மேசைகளில்
இதற்கு நிரந்தர உயிர் கொடுக்க
முயற்சித்தோம்
வீணாய் போன
விதண்டாவாத பேச்சுக்களால்
இதற்கு சாவு மணி அடித்தார்கள்

இது உயிர் பெறும் போது
பல்லாயிரம் உயிர்கள்
காப்பாற்றப்படுகின்றனர்
இது சாகடிக்கப்படும் போது
பலநூறு உயிர்கள்
காவு கொள்ளப்படப்போகின்றன

இதற்கு
நிரந்தரமான
உயிர் கொடுங்கள்
நிம்மதியாக
நான் வாழ வேண்டும்.

கல்லடி றொபேட்
கலந்துரை சிறையிலிருந்து

தலவாக்கலை நீர்த்தேக்கத் திட்டம்

பின்னணியும் எதிர்ப்பியக்கமும் மலையகத் தலைமைகளும்

– மோகன்ராஜ்

(கடந்தவார தொடர்ச்சி)

அவர்களது உள்ளூர் தரகர்களான அரசியல்வாதிகள், சுதேச கம்பனிகள் விஞ்ஞானிகள், உயரதிகாரிகள் ஆகியோர் பெரும் பணக்காரர் ஆகிவிடுகின்றார்கள். இவற்றின் பஞ மக்கள் மீதே விழுகின்றது. (மகாவலி அபிவிருத்தி அமைச்சராக இருந்த காமினி திசாநாயக்க திடீரென இலங்கையின் பெரும் தனவந்தர்களில் ஒருவராக மாறிய மர்மம் அனைவருக்கும் தெரிந்த இரகசியமாகும்.) இத்திட்டத்தின் பிரமாண்டம் விரிவடையும் அளவுக்குத்தான் இவர்களுக்கு கிடைக்கும் இலாபத்தின் அளவும் அதிகரிக்கும் என்கின்ற நிலமை இருப்பதனால் தேவையற்ற பல அம்சங்கள் இத்திட்டங்களில் சேர்க்கப்படுகின்றன. அதில் பிரதான இடத்தை இத்திட்டங்களுக்காக அமைக்கப்படும் விசாலமான ஆடம்பரமான வீதிகள் வகிக்கின்றன. இதற்கு நல்ல உதாரணம் கொத்மலை நீர்த்தேக்கத்தில் போடப்பட்டிருக்கும் சங்கிலி பாலம் – நாவலப்பிட்டி அகலப்பாதை. இந்த காட்டு வழிப்பாதையை இப்பொழுது யாரும் பொருட்படுத்துவதே இல்லை. பலகோடி ரூபாய் செலவில் தேவைக்கு மேலதிகமாக அமைக்கப்பட்ட இப்பாதை பயன்படுத்தப்படாமல் உள்ளது. பாரம்பரிய விவசாய முறைகளும் உள்ளூர் தொழில் நுட்பங்களும் புறக்கணிக்கப்பட்டு பல்தேசிய நிறுவனங்களின் இலாபத்தை தொடர்ச்சியாக பெருக்கும் விவசாய முறைகள் இங்கு ஊக்குவிக்கப்படுகின்றன.

இதற்கு கர்நாடக மாநிலத்தின் மலபிரபா திட்டம் சான்று பகிர்கிறது. பாரம்பரிய விவசாய முறை கைவிடப்பட்டு இன்று கடனாளியாகி வறுமை நிலையில் விவசாயிகள் அல்லல்படுவதை ஏற்கனவே பார்த்தோம். இனி இந்த சர்வதேச அனுபவங்களை மனதிற்கொண்டு தலவாக்கலை நீர்த்தேக்க திட்டத்திற்கே செல்வோம்.

தலவாக்கலை நீர்த்தேக்கத்திட்டம் : காமினி திஸாநாயக்கவின் கனவு

தலவாக்கலை நீர்த்தேக்க திட்டத்தை மகாவலி அபிவிருத்தியின் ஒரு கட்டம் என்பதை விட் மலையக தமிழ் மக்களின் செறிவான பரம்பலை சிதறடிக்கும் காமினி திஸாநாயக்கவின் இரகசியத் திட்டத்தின் உச்ச கட்டம் என்பதே பொருத்தமானதாகும்.

இதற்கொரு நீண்ட பின்னணி உண்டு. காலஞ் சென்ற முன்னாள் மகாவலி அபிவிருத்தி அமைச்சர் காமினி திசாநாயக்க நுவரெலியா மாவட்டத்தில் உள்ள கொத்மலையில் பிறந்தவர். இது தலாவாக்கலைக்கு அருகில் உள்ள ஒரு சிங்கள கிராமம். இதற்கொரு வரலாறு உண்டு. பேரினவாதிகளால் இன்று சிங்கள தேசிய வீரனாக சித்தரிக்கப்படும் துட்டகைமுனு இந்த கிராமத்திற்கு தப்பி ஓடிவந்து ஒளிந்திருந்ததாகவும், இங்கு ஒரு சிங்கள பெண்ணை திருமணம் செய்து அதன் மூலம் குழந்தைகள் பிறந்ததாகவும் பின்னர் இந்த கிராமத்தில் இருந்தே படை திரட்டி ஏனைய சிற்றரசர்களை வெற்றிகொண்டு இறுதியாக எல்லாளனைக் கொன்று முழு இலங்கைக்கும் அவனே அரசனானதாகவும் ஐதீகக் கதை உண்டு. இதனை இந்த கிராமத்தில் உள்ள மேட்டுக் குடியினர் நம்புகின்றனர். அதையிட்டு பெருமை - கொள்ளவும் செய்கின்றனர். துட்ட காமினியின் பெயரைத் தாங்கிய காமினி திஸாநாயக்க இதற்கு ஒரு படி மேல் போய் தன்னைத் தானே துட்டகைமுனுவின் இரத்தவழித் தோன்றல் எனக் கருதவும், பகிரங்கமாக கூறவும் தொடங்கினார். அவர் கண்ட கனவுகளில் ஒன்றுதான் மலையகத்தில் தமிழர்கள் அடர்த்தியாக வாழும் பகுதிகளில் இன விகிதாசாரத்தை மாற்றியமைப்பதாகும். இந்த கனவை நிறைவேற்றும் வாய்ப்பு அவருக்கு ஜே. ஆர் ஜயவர்தனவின் ஆட்சிக்காலத்தில் (1977 – 90) கிடைத்தது. இலங்கையின் முதலாவது பிரதமர் டீ.எஸ். சேனநாயக்க காணி, விவசாய அமைச்சராக இருந்தபோது வடக்கு கிழக்கு மாகாணங்களில் சிங்கள் குடியேற்றங்களை நிறுவி எப்படி தமிழ்பேசும் மக்கள் வாழ்ந்த மண்ணின் இன அடையாளத்தை மாற்றினாரோ அதே காரியத்தை மகாவலி அபிவிருத்தி அமைச்சராக இருந்து கொண்டு காமினி திசாநாயக்க மலையகத்தில் செய்தார்.

மகாவலி அபிவிருத்தி திட்டத்தை துரித கதியில் செய்து முடிக்கும் தீர்மானத்தை ஜே. ஆர். அரசு மேற்கொண்டதும். அதனை அமுல் படுத்துவதற்காக அதிகார சபை ஒன்று அமைக்கப்பட்டது. அதற்கு மகாவலி அபிவிருத்தி என்கிற பெயரில் மகாவலி படுக்கையை சுற்றி வரவுள்ள பகுதிகளையும் நீர்வளத்தை பாதுகாத்தல், நீரேந்து பகுதிகளில் காடு வளர்த்தல், நீரில் மூழ்கும் கிராமங்களில் உள்ள சிங்களவரை மீளக்குடியமர்த்தல் என்கிற பெயரில் சுவீகரிப்பதற்கான விசேட அதிகாரம் அதற்கு வழங்கப்பட்டது. இவ்வதிகாரத்தை காமனி திசாநாயக்க முழு அளவில் பயன்படுத்தினார்.

(மிகுதி அடுத்த வாரம்)

நன்றி – தேனீ இணையத்தளம்

கண்டது.. கேட்டது.. படித்தது..

விழிப்பு நிகழ்ச்சி TNL அலைவரிசையில் செவ்வாய் தோறும் இரவு 7.25 மணிக்கு ஒளிபரப்பாகும். விழிப்பு நிகழ்ச்சி தொடர்பான உங்கள் அபிப்பிராயங்கள் வரவேற்கப்படுகின்றன. அனுப்பவேண்டிய முகவரி :- விழிப்பு, யாழ் ஏரியா டெலிவிஷன், இல 713, டி.பி. விஜயசிங்க மாவத்தை, பெலவத்தை, பத்தரமுல்லை.
தொலைபேசி இலக்கம் 0112787041-9 தொலைநகல் இலக்கம் 0112787043 மின்னஞ்சல் முகவரி villippu@yatv.net இணையத்தள முகவரி www.yatv.net

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பக்க வடிவமைப்பு (கணனி) – சிற்றம்பலம் கணேசன்

இரு புதிய நவீன CAR வாடகைக்கு

★ திருமணம் (அலங்காரத்துடன்)
★ சுற்றுலா ★ விசேட வைபவங்கள்

போன்ற அனைத்து தேவைகளுக்கும் ஆங்கில இலக்கம் கொண்ட நவீன கார் சாரதியுடன் நியாயமான விலையில் உயர்ந்த சேவையுடன் பெற்றுக்கொள்ளலாம். (48465) (24)

தொடர்பு: ரட்ணம்
சோமசுந்தரம் கார் மாடசாலை
22, சோமசுந்தரம் அவெனியூ, கல்லடிக்குறி, யாழ்ப்பாணம்
T.P.: 0777-903090
0777 246117

நெடுந்தீவுக்கு மின் பிறப்பாக்கி

நெடுந்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு புதிய மின்பிறப்பாக்கி இயந்திரத்தை யாழ்.செயலகம் வழங்கியுள்ளது.

நெடுந்தீவுக்கென கியூமெடிக்கா நிறுவனம் வழங்கிய அம்புலன்ஸ் மோட்டார் படகுச் சேவை ஆரம்பவிழாவின்போது மேற்படி வைத்தியசாலைக்கு புதிய ஜெனரேட்டர் ஒன்றைத் தந்துதவுமாறு யாழ்.மாவட்ட அரச அதிபர் எஸ்.கணேசிடம் விடுக்கப்பட்ட கோரிக்கையை அடுத்து அரச அதிபர் இந்த புதிய மின்பிறப்பாக்கி இயந்திரத்தை நெடுந்தீவு வைத்தியசாலைக்கு வழங்கியுள்ளார். (111)

மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1980 ஆம் ஆண்டு பிறந்த கிரகபாவமற்ற, உத்தரட்டாதி நட்சத்திரம், மேற்படிப்புக்காக (Computer M.Sc.) கனடா சென்றுள்ள பெண்ணுக்கு படித்த, கனடா, ஆஸ்திரேலியா, லண்டன் PR உள்ள மணமகன் தேவை. தகுந்த சீதனம் வழங்கப்படும். பெற்றோர் இலங்கையில் உள்ளனர். தொடர்புகொள்ள வேண்டிய இலக்கம்:0714815244. (50189)

இணுவிலில் புதிய காவலரண்

இணுவில் கந்தசாமி கோயில் வீதிச் சந்தியில் புதிய இராணுவக் காவலரண் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

கடந்த சில நாள்களாக இடம்பெற்ற அசம்பாவிதங்களைத் தொடர்ந்தே இந்த புதிய இராணுவக் காவலரண் அமைக்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

இந்தப் புதிய காவலரண் அமைக்கப்பட்டதன் மூலம் இப்பகுதியில் பொது மக்களின் போக்குவரத்துக்களை கட்டுப்படுத்தக்கூடியதாக இந்தப் புதிய காவலரண் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (86)

மலேசியா நாட்டில் வேலைவாய்ப்பு பெற்றுக்கொள்ள மலேசியா மொழி கற்பித்தல்.

தனா மேன்பவர் (பிரைவட்) லிமிட்டட் மலேசியா அரசாங்கத்தாலும், வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தாலும் மலேசியா மொழியை கற்பிப்பதற்கு அங்கீகரிக்கப்பட்டுள்ளது. மலேசியா நாட்டிற்கு விசா பெற விரும்பும் அனைவருக்கும் MLVK சான்றிதல் கட்டாயம் தேவை. கற்றுக்கொள்ள விரும்புவோர் உடனடியாக எங்களது காரியாலயத்தை தொடர்பு கொள்ளவும். தங்கி படிக்க விரும்புவோருக்கு தங்கும் வசதி சாப்பாடு வசதி உண்டு.

தனா மேன்பவர் (பிரைவட்) லிமிட்டட்.
இல. 104, செட்டியார் தெரு, 2ம் மாடி, கொழும்பு - 11.
Tel : 011 - 5333346 / 7 / 8 / 9.

தனா இன்டர்நெசனல் கல்வி நிலையம்.
இல. 4, பம்பலப்பிட்டி டிரைவ், பம்பலப்பிட்டி, கொழும்பு - 04.
Tel : 011 - 4510456 / 7

இன்டஸ்ட்ரியல் டிரெயினிங் இன்ஸ்ட்டிட்டியு.
இல. 571, கட்டுவ, சிலாபம் வீதி, நீர்கொழும்பு.
Tel : 031 - 4872869.

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில்
22 - 11 - 1938

இறைவன் அடியில்
26 - 04 - 2005

கார்த்தி கிருஷ்ணபிள்ளை
(இராசமணி)
(இளைப்பாறிய இ.போ.ச. சாரதி)
திதி: 14.05.2006

எமது குடும்பத்தின் ஒளி விளக்காய்த் திகழ்ந்து எமையெல்லாம்
இத்தரணியில் வாழ வழிவகுத்த எமதன்பு ஐயாவே!
எம்மிடம் இருந்து காலனும் உமைப்பிரித்து
ஆண்டு ஒன்று உருண்டோடியதோ நெஞ்சமோ
மறக்கமுடியவில்லை ஐயா! நினைவோ அழியவில்லை ஐயா!
அன்பையும் அறிவையும் பாசத்தையும் பொழிந்த நீங்கள் எம்மை
எல்லாம் நல்வழிப்படுத்தி எம் உயர்வுக்கு எம்முடன்
இருப்பீர்கள் என நினைத்தோம் ஏமாற்றிவிட்டு ஒரு நொடியில்
எம்மைப் பிரிந்தது ஏன் ஐயா? உங்கள் நினைவலைகளைச்
சுமந்து நிற்கின்றோம்! உங்கள் பிரிவால் வாடும்

கரணவாய், கரவெட்டி

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

(50174)

எல்லா சிறப்புச் சந்தைகளிலும் நாடெங்கும் மருந்தகங்களிலும் விற்பனையாகின்றது.

Distributor Eastern Province
Ms Multi Power
Main Street, Maruthamunai.
Tel: 077 3040623, 077 6180567

Sole Agents:
Seri Trading Company (Pvt) Ltd
Hotline: 0114810 251

எலெக்ட்ரோ மெக்கேனிக்கல் டெக்னீசியன்-பாடத்திட்டம்
Electro Mechanical Technician-Course

எலெக்ட்ரோ மெக்கேனிக்கல் டெக்னீசியன் பாடத்திட்டம் மிகவும் பிரபலம் வாய்ந்தவை. இந்தப்பாடத்திட்டத்தை படித்து முடிப்போருக்கு மத்திய கிழக்கு நாடுகளிலும் இலங்கையிலும் உடனடியாக வேலைகள் காத்திருக்கின்றன. இந்தப் பாடத்திட்டத்தின் முக்கிய நோக்கம் ஒரு நபர் பல வேலைகளை (Multy Skilled) கட்டாயம் தெரிந்திருக்க வேன்டும். இதன்படி **Electrical, Air Conditioning, Plumbing, Pipe Fitting, Welding, Ducting, Safety, Attitude & English** இவை அனைத்தும் கற்பிக்கப்படுகின்றன.

காலம் 06 மாதம்
தங்கும் வசதி, உணவு வசதி உண்டு.

இப்பாடத்திட்டம் இந்தியாவின் டாட்டா நிறுவனத்தின் கிளை நிறுவனமான Voltas Bombay, India Ltd. ஆல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இப்பாடத்திட்டம் முடிந்தவுடன் டாட்டா நிறுவனத்தின் வெளி நாட்டில் நடாத்தப்படும் கட்டுமான பணிகளில் சேர்த்துக்கொள்ளப்படுவர். அத்துடன் தனா மேன்பவர் வெளிநாட்டு வேலை வாய்ப்பு நிறுவனத்தால் ஏனைய வேலைத்தளங்களில் வேலை செய்வதற்கு ஏற்பாடுகள் செய்து தரப்படும். அத்துடன் உலகம் முழுவதும் ஏற்றுகொள்ளக் கூடிய சான்றிதல் வழங்கப்படும். நீங்களும் **Multy Skilled Technician** ஆவதற்கு உடனே எங்களை தொடர்புகொள்ளவும்.

இன்டஸ்ட்ரியல் டிரெயினிங் இன்ஸ்டிடியுட்
Industrial Training Institute (ITI)
571, சிலாபம் வீதி, கட்டுவ, நீர்கொழும்பு
தொ.பே. 031-4872869 / 077-3124787

இது ஒரு தொழில் பயிற்சி நிறுவனம்
Member Of Dana Group

DANA ADVERTISING & PROMOTIONS

தொழில் பயிற்சியும் - வேலைவாய்ப்பும்

தனா மேன்பவர் பிரைவட் லிமிட்டட் - இன்டஸ்ட்ரியல் ட்ரெயினிங் இன்ஸ்டிட்டியுட் இரு நிறுவனங்களும் இணைந்து தொழில் பயிற்சி இல்லாதோருக்கும், தொழில் திறமை இல்லாதோருக்கும் - திறமையான தொழில் பயிற்சி வழங்கி உடனடியாக வேலை வாய்ப்பு வழங்கி வ்ருகின்றோம்.

தொழில் பயிற்சி காலம் 1 மாதம் முதல் 6 மாதம் வரை:

மேசன், சட்டரிங் கார்ப்பென்டர், பார்பென்டர், பிளம்பர், பைப்பிட்டர், A/C மெக்கேனிக், டக்ட் மெக்கேனிக், வெல்டர், எலெக்ட்ரோ மெக்கேனிக்கல் டெக்னீசியன், பெப்ரிகேட்டர், ஸ்கெப்போல்டர், இலெக்ட்ரீசியன்.

தொழில் பயிற்சி முடிந்தவுடன் உடனடி வேலைவாயுப்பு. சம்பளம் (20000) இருபதாயிரத்திற்கு மேல்.

பயிற்சியின் போது பொறியியளாளரின் வரை படம் பார்த்து ஆங்கிலம் மொழிபேசி சர்வதேச தரத்திற்கு நிகராக தொழில் புரிய பயிற்சி அளிக்கப்படும். அத்துடன் Saftey Kit - பாதுகாப்பு சாதனங்கள்வழங்கப்படும். பயிற்சியின் போது தேவைப்படுவோருக்கு உணவும், தங்கும் வசதி உண்டு.

இந்தியாவின் டாடா நிறுவனத்தின் உறுப்பு நிறுவனமான **Voltas** நிறுவனத்துடனும் லண்டனில் இயங்கிவரும் **City & Guilds** நிறுவனத்துடனும், இலங்கை அரசாங்கத்தின் நிறுவனமான **Vocational Training Authority** ஆகிய நிறுவனத்தினுடன் இணைந்து தொழில் பயிற்சி வழங்கி உலகம் முழுவதும் ஏற்றுக்கொள்ளக்கூடிய சான்றிதழ் வழங்கி தொழில் பெற்றுக்கொடுக்கின்றோம்.

உடனே இணைந்து உங்களது எதிர்காலத்தை நல்ல தொழிலுடன் ஆரம்பியுங்கள்.

செய்யும் தொழிலே தெய்வம் திறமை தான் நமது செல்வம்

இன்டஸ்ட்ரியல் டிரெயினிங் இன்ஸ்டிடியுட்
Industrial Training Institute (ITI)
571, சிலாபம் வீதி, கட்டுவ, நீர்கொழும்பு
தொ.பே. 031-4872869 / 077-3124787
(Member of DANA Group)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்காம் ஆண்டின் நினைவுகளில்...

மலர்வு 16 - 08 - 1940

உதிர்வு 28 - 04 - 2002

அமரர் **வீரகத்தி திரவியம்**

அன்பின் ஒளியாய் எம்மை வாழவைத்த எம் அப்பாவே! நான்காண்டு ஆனதப்பா உம்நினைவுகள் எம் நெஞ்சை விட்டகலவில்லை. உங்கள் நினைவில் வாழும்

மனைவி, பிள்ளைகள், மருமகன், பேரன்.

82/9, 3 ஆம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். (50195)

அதிபர் நியமனம்

நெடுந்தீவு,மே14

நெடுந்தீவு மாவிலித்துறை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலைக்கு புதிய அதிபர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். கடந்த முதலாம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் அதிபராக செல்வி எஸ்.அகிலாண்டேஸ்வரி நியமனம் பெற்றுள்ளார். (111)

தேவை

நன்கு தோட்ட வேலை தெரிந்த ஒருவரும் உதவியாளர் ஒருவரும் இரவுக காவலாளி ஒருவரும் தேவைப்படுகின்றனர். தகுதியானவர்கள் தோலியோடை, கரணவாய் வடக்கு, கரவெட்டி என்ற முகவரிக்கு தொலைபேசி இலக்கத்துடன் அனுப்பிவைக்கவும்.தொடர்பு கொள்ளவேண்டிய

தொலைபேசி இல:021-2263657 (49994)

அறிவுள்ளோரின் தெரிவு

ரோயல் குளுக்கோஸ்

100 % சுத்தமானது

உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும்போது குளுக்கோஸ் என்று கேட்காமல் ரோயல் குளுக்கோஸ் தாருங்கள்! என்று கேட்டு வாங்குங்கள்!

Packed By: ROYAL INDUSTRIES COLOMBO-12 ☎0777-277670

அனைத்துப் பார்மஸிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்

ஏக விநியோகஸ்தர்கள்:
சிவா நறுமணப்பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
☎ 021 222 2567

100g ரோயல் குளுக்கோசின் ஆகக்கூடிய சில்லறை விலை 23.90

IMMEDIATE VACANCY

solidar
An INGO consortium including NPA, SAH and ASB

Solidar is a consortium of organizations of 12 European countries that supports a broad portfolio of projects. The Solidar network in Sri Lanka comprises of three international, NGOs – Arbeiter Samariter Bund (ASB), Norwegian People's Aid (NPA) and Swiss Labour Assistance (SAH).

Under the Village Rehabilitation and Development Physical Infrastructure Program, Solidar will be implementing the construction of more than 1000 permanent houses for Tsunami Affected families in Vadamarachchi East.

Position: Electricians (No of Positions 06)

Qualifications:

- Those who have followed an Electrical house wiring course (minimum of 6 months)
- The candidate should have minimum of 2 years of experience. In relevant field.
- The knowledge in plumbing or mechanical qualification is considered as additional qualification.

Interested candidates MUST posses the minimum requirements stated above. The applications should be addressed to Mr. S. Jayasekaran- Project Officer (Electrical Projects) on or before 20th May 2006.

Solidar, No. 156 Jaffna Road, Paranthan

Norwegian People's Aid

Arbeiter-Samariter-Bund Deutschland e.V.

Swiss Labour Assistance SAH

இசை நாடகக் குயிலின் ஓராண்டு அஞ்சலி

இசையுலகில் 27 - 04 - 1928

இறையடியில் 14 - 05 - 2005

கலாபூஷணம் **வி.கே.இரத்தினம்**

திதி: 03-05-2006

இசை நாடகத் துறையின்
இணையில்லா பெருங் கலைஞரே!
அசைவில்லா வாழ்வு எமக்களித்து
இகமதில் இனிதாக வாழவைத்தவரே
திசை யெல்லாம் புகழ்பூத்த
தீந்தமிழ்க் காவலனே! கலாபூஷணமே!
இசைக் கூத்தன் திருவடிநீ
இணைந்து ஆண்டு ஒன்றானதே.

-குடும்பத்தினர்.

34/3, கலைமகள் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம். (49932)

மீண்டுமோர் எமது சேவை சுன்னாகத்தில்!

THE MOTHER AND CHILD

அனைத்து விதமான தாய்,சேய் பராமரிப்பு பொருள்களை வழங்க நம் சேவையை சுன்னாகத்தில் கோலாகலமாக ஆரம்பித்துள்ளோம்.

இல - 160 E,
காங்கேசன்துறை வீதி, சுன்னாகம்.

உண்மையான தரம்! | நியாயமான விலை!

நம்பி நாடுங்கள் எமை!

குழந்தைகளுக்கான
உணவுப் பெருள்கள் [பால் மா வகை]
விளையாட்டுப் பொருள்கள்
இதர பராமரிப்பு பொருள்கள்

தாய்மாருக்கான
பால் மா வகை
உடைகள்
அழகுசாதனப் பொருள்கள்

நாள் முழுவதும் உங்கள் செல்வங்களை மகிழ்ச்சிக் கடலில் அசரவைக்கும்!
ஒரு முறை வந்தால் போதும்! உங்கள் தலைமுறையே எங்களை நாடும்!

புதிதாய் பூமியில் காலடி பதிக்கும் குழந்தைச் செல்வங்களின் மென்மையான அரவணைப்பிற்கு... (49959)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளிநொச்சியில் சிமெந்துக்குத் தட்டுப்பாடு: இதனால் வீடமைப்புப் பணிகள் பாதிப்பு

பரந்தன்,மே14

கிளிநொச்சி மாவட்டத்தில் சிமெந்துக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் அங்கு மேற்கொள்ளப்பட்டுவந்த வீடமைப்புப்பணிகள் பாதிப்படைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. தற்போது நாட்டில் நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாகக் கிளிநொச்சியில் சிமெந்துக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

வீடமைப்பு அதிகாரசபை அக்கராயன் கெங்காதரன் குடியிருப்பில் 40 புதிய வீடுகளை அமைக்கும் பணியை மேற்கொண்டு வந்தது. தற்போது ஏற்பட்டுள்ள சிமெந்துத் தட்டுப்பாடு காரணமாக இந்தப் பணிகளைத் தொடர்ந்து முன்னெடுக்க முடியாமல் உள்ளதாக வீடமைப்பு அதிகாரசபை வட்டாரங்கள் தெரிவித்தன. சிமெந்து கிடைக்கப்பெறும் பட்சத்திலேயே தொடர்ந்து பணிகளை மேற்கொள்ளமுடியும் எனவும் அவை தெரிவித்துள்ளன. (352)

அதிபர்கள் நியமனம்

சுதந்திரபுரம் கனிஷ்ட உயர்தர வித்தியாலயம், மன்னாகண்டல் அ.த.க. பாடசாலை ஆகியவற்றுக்குப் புதிய அதிபர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த பல மாதங்களாக இப்பாடசாலைகள் அதிபர்கள் இன்றி இயங்கிவந்தன. கடந்த 5ஆம் திகதிமுதல் இதற்குப் புதிய அதிபர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

சுதந்திரபுரம் கனிஷ்ட உயர்தர வித்தியாலயத்துக்கு ச.மகேந்திரராசாவும், மன்னாகண்டல் அ.த.க. பாடசாலைக்கு எஸ்.துரைராசாவும் அதிபர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். (353)

முன்பள்ளிச் சிறுவர்களுக்கு சேமிப்பு உண்டியல் வழங்கல்

கிளிநொச்சி,மே14

முன்பள்ளி அபிவிருத்தி ஆண்டினை முன்னிட்டு புதுக்குடியிருப்பு பிரதேசத்திலுள்ள ஆனந்தபுரம் மில்லர் முன்பள்ளியின் 20 சிறார்களுக்குச் சேமிப்பு உண்டியல் வழங்கும் நிகழ்வு கடந்த 5ஆம் திகதி நடைபெற்றது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் வடக்கு - கிழக்கு மாகாண முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையத்தின் நிதியுதவியுடன் புதுக்குடியிருப்புப் பிரதேச முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையமும் முல்லைத்தீவு வடக்கு - கிழக்கு அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவனமும் இணைந்து இந்த சிறுவர்களுக்கான சேமிப்பு உண்டியல்களை வழங்கியுள்ளன.

இந்த நிகழ்வில் முன்பள்ளி அபிவிருத்தி ஆண்டு தொடர்பாகவும் சிறுவர்களின் சேமிப்புத்திட்டங்கள் தொடர்பாகவும் புதுக்குடியிருப்பு பிரதேசத்தின் முன்பள்ளி அபிவிருத்தி இணைப்பாளர் செல்வி நி.ஜெயதீஸ்வரி, 'நெற்றோ' நிறுவன சமூக நலன் திட்ட இணைப்பாளர் திருமதி அ.ஜான்சி ஆகியோர் கருத்துரைகளை வழங்கினார்கள். (307)

கட்டாக்காலி கால்நடைகளின் தொல்லை வட்டக்கச்சிப் பகுதியில் அதிகரிப்பு

பரந்தன்,மே14

வட்டக்கச்சிப் பகுதியில் கட்டாக்காலி கால்நடைகளின் தொல்லைகள் அதிகரித்து வருவதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

வட்டக்கச்சிப் பகுதியில் தற்போது 2006ஆம் ஆண்டுக்கான சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுவருவதால், விதைக்கப்பட்ட நெற்பயிர் நிலங்களைக் கட்டாக்காலி கால்நடைகள், சேதமாக்கி வருகின்றன. இதனால், அப்பகுதி விவசாயிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கிவருகின்றனர்.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால், கால்நடைகளைக் கட்டுப்படுத்துமாறு அறிவித்தல்கள் விடுக்கப்பட்டு வருகின்றபோதும், கால்நடை வளர்ப்போர் தமது கால்நடைகளை உரிய முறையில் கட்டுப்படுத்தவில்லையென விவசாயிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

பயிர் நிலங்களுக்கு கட்டாக்காலி கால்நடைகள் கூட்டம் கூட்டமாக நுழைந்து பயிர்களைச் சேதமாக்குவதால் சிறிய பயிர்கள் அடியோடு அழிந்துவிடுகின்றன.

இந்தக் கட்டாக்காலி கால்நடைகள் வீதிகள், பாடசாலைகள் மற்றும் பொதுச்சந்தை உட்படப் பல பொது இடங்களிலும் இரவு வேளைகளில் படுத்துறங்குவதால் வீதிகளில் பயணிப்போர் விபத்துக்குள்ளாவதுடன், பல்வேறு அசௌகரியங்களும் ஏற்படுகின்றன.

எனவே, சம்பந்தப்பட்டவர்கள் தமது கால்நடைகளை உடனடியாகக் கட்டுப்படுத்துமாறு அப்பகுதி விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (352)

அறிவியல் உலா நிகழ்வு

பரந்தன்,மே14

விசுவமடுவில் அமைந்துள்ள இளையோர் அறிவியற் கழகத்தின் 'அறிவியல் உலா - 2006' நாளை திங்கட்கிழமை முதல் 18ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.

இதில் அனைவரையும் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு இளையோர் அறிவியற் கழகம் அழைப்பு விடுத்துள்ளது. (352)

உணவு பதனிடல் பாதுகாத்தல் பயிற்சி

பரந்தன்,மே14

பூநகரி வலைப்பாட்டுக் கிராமத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் ஊக்குவிப்புக் குழு உறுப்பினர்களுக்கான உணவு பதனிடலும், பாதுகாத்தலும் பற்றிய செய்முறைப் பயிற்சி வகுப்பு கடந்த 6ஆம் திகதி சனிக்கிழமை வலைப்பாடு பங்குப் பணிமனையில் நடைபெற்றது.

இத்திட்டத்திற்கான ஆலோசனைகளையும், பயிற்சிகளையும் கிளிநொச்சி வலய ஆசிரிய ஆலோசகர் திருமதி பாலச்சந்திரன் வழங்கினார்.

இந்த உணவு பதனிடல் - பாதுகாத்தல் தொடர்பான பயிற்சி வகுப்பில் ஊக்குவிப்புக்குழு உறுப்பினர்களைச் சேர்ந்த 50 உறுப்பினர்கள் பங்குபற்றிப் பயன்பெற்றுள்ளனர். (353)

'நெக்டெப்' திட்டத்திற்கு அலுவலகம் திறந்துவைப்பு

கிளிநொச்சி,மே14

தமிழீழ பொருண்மிய மதியுரையகத்தினால் உமையாள்புரம் கிராமத்தில் 'நெக்டெப்' (NECCDEP) திட்டத்திற்குரிய அலுவலகமொன்று கடந்த 2ஆம் திகதி பி.ப. 4.30 மணிக்குத் திறந்துவைக்கப்பட்டது.

'நெக்டெப்' திட்டத்தினால் உமையாள்புரம், குமரபுரம் போன்ற கிராமங்களில் தமது திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. கிராமங்களில் இவர்களுக்கான அலுவலக வசதி இல்லாமையினால், தமது திட்டங்களை முன்னெடுத்துச் செல்வதில் சிக்கல்களை எதிர்நோக்கியதன் காரணமாக இதற்கென அலுவலக வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

பொருண்மிய மதியுரையகத்தின் திட்ட இணைப்பாளர் மனோகரன் தலைமையில் ஆரம்பமான நிகழ்வில் பொதுச்சுடரினை உமையாள்புரம் கிராம அலுவலர் சேகர் ஏற்றினார். தமிழீழ தேசியக் கொடியினை பொருண்மிய மதியுரையகத்தின் கணக்காளர் நேசநாதன் ஏற்றிவைத்தார். அகவணக்கத்தைத் தொடர்ந்து பெயர்ப்பலகையினை கிளிநொச்சி மாவட்ட 'நெக்டெப்' திட்டத்தின் பிரதித்திட்டப் பணிப்பாளர் த.தயாகுணரட்ணசிங்கம் திரைநீக்கம் செய்துவைத்தார். கட்டடத்தினை 'நெக் டெப்' திட்ட முகாமைத்துவ நிபுணர் கேதீஸ்வரன் நாடாவை வெட்டித்திறந்துவைத்தார்.

முதலுதவிப் பயிற்சி

தமிழீழ சுகாதார சேவைகள் பிரிவினரால் பாடசாலை மாணவர்களுக்கான முதலுதவிப் பயிற்சியின் ஆரம்ப நிகழ்வு கடந்த 7ஆம் திகதி பி.ப. 3 மணிக்கு பூநகரி நான்காம் கட்டையிலுள்ள ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலத்தில் பூநகரி தமிழீழ சுகாதார சேவைப் பொறுப்பாளர் அரவிந்தன் தலைமையில் நடைபெற்றது.

முதலுதவிப் பயிற்சியின் முக்கியத்துவம் பற்றி பூநகரி ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலய அதிபர் க.ஞானசீலன் கருத்துரை வழங்கினார். முதலுதவிப் பயிற்சியில் உளவியல் சம்பந்தமான ஒழுங்கமைப்பை பூநகரி மகாவித்தியாலய ஆசிரியர் பிறட்லி எடுத்துரைத்தார். தொடர்ந்து தற்போதைய சூழ்நிலையில் முதலுதவிப் பயிற்சியின் அவசியம் பற்றி பூநகரி அபிவிருத்திப் புனர்வாழ்வுக் கழகத் தலைவர் இ.பஞ்சாட்சரம் உரையாற்றினார்.

இந்நிகழ்வில் பூநகரி மகாவித்தியாலயம், பூநகரி ஸ்ரீ விக்கினேஸ்வரா வித்தியாலயத்தைச் சேர்ந்த தரம் 9,10,11 மாணவர்கள் கலந்துகொண்டனர். (352)

கிளிநொச்சி வன்னேரிக்குளம் மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி அண்மையில் நடைபெற்றது. இதில் விருந்தினர்கள் மாணவர்களின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொள்வதையும் முதன்மை விருந்தினர்களாகக் கலந்துகொண்ட கிளிநொச்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.சின்னத்துரை உரையாற்றுவதையும் படங்களில் காணலாம். *(படங்கள்: அக்கராயன் செய்தியாளர்)*

திறந்த வெளியரங்கு திறந்துவைப்பு

பரந்தன்,மே14

மல்லாவிப் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட யோகபுரம் மத்தி பொது விளையாட்டு மைதான திறந்த வெளியரங்கு திறப்புவிழா நிகழ்வு கடந்த 9ஆம் திகதி பி.ப. 4.30 மணியளவில் துணுக்காய் பிரதேச சபை விசேட ஆணையாளர் விக்டர் ஜெயசிங்கம் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மங்கள விளக்கினை வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம், 'நிகொட்' திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் பரணிதாஸ், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன துணைப் பொறுப்பாளர் சு.சின்னவன், பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் வீ.தவராசா, துணுக்காய் பிரதேச செயலர் நா.நந்தகுமார் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

தேசியக் கொடியினை மல்லாவிக் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் அருந்தவம் ஏற்றிவைத்தார். திறந்த வெளி அரங்கை வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம் திறந்துவைத்தார். (353)

விடுதலைப் புலிகளுக்கு மறுக்கப்பட்ட.....

(05ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொள்ளுகின்ற போது - நாமும் சில தற்காப்பு நடவடிக்கைளை எடுக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாவோம் என்பதை கண் காணிப்புக்குழுத் தலைவருக்குச் சுட்டிக் காட்டியிருக்கின்றோம்.

அரசாங்கத்திற்கு மட்டுப்படுத்தப்பட்ட நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் இருந்தால் விடுதலைப் புலிகளுக்கும் அதே அதிகாரம் உண்டு. இருதரப்பினரும் படைவலுச் சமநிலை என்பன ஏற்றுக்கொள்ளப்பட்ட அடிப்படையில்தான் அமைதி முயற்சிகள் அமைந்திருகின்றன.

விடுதலைப் புலிகளும் அந்த அதிகாரங்களை அதை நடைமுறைப்படுத்தத் தயங்கமாட்டார்கள் இந்தச் சம்பவத்தை (கடற் சமரை) நிச்சயமாக அவ்வாறு கருதலாம்.

கே:- போர்நிறுத்த மீறல்கள் தொடர்ந்து கொண்டிருக்கின்ற நிலையில் போர் நிறுத்த மீறல்கள் என்று பிரகடனப்படுத்தப்பட்டவை தொடர்பாக என்ன நடவடிக்கை எடுக்கப்படுகின்றது?

ப:- மீறல்கள் தொடர்பாக உண்மையை நன்கு ஆராய்ந்து தீர்ப்பு வழங்கவேண்டுமென்று அவர்களுக்கு கூறியிருக்கின்றோம். எமது கடற்பிராந்தியத்தில் எமது கடற்படகுகள் நாளாந்த பயிற்சி நடவடிக்கையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போது கடற்படையினர் வந்து சீண்டினார்கள். நாம் தற்காப்பு நடவடிக்கை எடுக்கவேண்டிய நிலைக்கு ஆளானோம். விடுமுறையில் சென்ற 500 முதல் 600இராணுவத்தினரை தாக்கி அழிப்பதற்கு எம்மால் இயலாமலில்லை. அதில் நாம் எவ்வளவோ சுயகட்டுப்பாட்டையும் பொறுமையையும் பேணி இருக்கின்றோம். தொடர்ந்தும் இதை நீங்கள் எதிர்பார்த்திருக்க முடியாது என்பதை கண்காணிப்புக்குழுவிடம் சொல்லியிருக்கின்றோம்.

தென் தமிழீழத்தில் இருந்து எமது தளபதிகள், போராளிகளின் போக்குவரத்து செய்த போது எம்மைத் தாக்க முற்பட்ட அதேவேளை எமது கடற்படை படகுகள் தீவிர தாக்குதலை மேற்கொள்ள முற்பட்ட போது பின்வாங்கி ஓடிவிட்டனர். எமது பயணம் சுமுகமாக நடைபெற்றது. ஆகவே இலங்கை கடற்படையால் எமது கடற்படையோடு தாக்குப்பிடிக்க இயலாது.

மஹிந்த அரசு யுத்த நிறுத்தத்தை, அமைதி முயற்சிகளை மதிப்பதாக விரும்புமாயினால் யுத்த நிறுத்த உடன்படிக்கையை மீறுகின்ற வா அமுல்படுத்தக்கின்ற அர்ப்பணிப்பை வெளிக்காட்டவேண்டும். அதுவே இருக்கும் ஒரேயொரு இறுதி வழிமுறை. வேறு மார்க்கமில்லை. கண்காணிப்புக்குழுத் தலைவருக்கு என்று மில்லாதவாறு வன்மையான கடுமையான கண்டனத்தை தெரிவித்திருக்கின்றோம்.

கே:- நிலைமை உச்ச கட்டத்திற்குச் சென்ற பின்னர் அமைதிமுயற்சிக்கான - பேச்சுவார்த்தைக்கான - சூழல் வரும் என்று நம்புகின்றீர்களா?

ப:- களநிலைமைகள், நாளாந்தம் நடக்கும் சம்பவங்கள் இதை உங்களுக்கு உணர்த்தும். எமது தலைமைப் பீடம் எடுக்கும் நிலைப்பாடு, மக்கள் எடுக்கும் நிலைப்பாடு என்பனவெல்லாம் உள்ளடங்கியதாகவே இறுதிக்கட்டத் தீர்மானம் அமையும். இதற்காக இறுதிவரைக் காத்திருக்க வேண்டியிருக்கின்றது.

கே:- விடுதலைப் புலிகள் பொறுமை காப்பது என்பது இன்னும் எவ்வளவு காலத்திற்கு?

ப:- விடுதலைப் புலிகள் பொறுமையின் விளிம்புக்கு பல முறை வந்திருக்கின்றார்கள். [illegible] வையும் பொறுமையுடன் விளிம்பில் இருக்கின்றார்கள் எப்படியான தீர்மானங்கள் எடுக்கப்படும் என்பதை உங்களுக்கு சம்பவங்கள் தான் உணர்த்த முடியும் அறிக்கைகள், பேச்சுக்களால் உணர்த்த முடியாது நாளாந்த சம்பவங்களை பார்த்து உணர்ந்து கொள்வது பொருத்தமாக இருக்கும்.

கே:- மஹிந்த அரசுடன் அடுத்த சுற்றுப் பேச்சு நடக்குமென்ற நம்பிக்கை உள்ளதா.....?

ப:- எமது மக்களுடைய பாதுகாப்பு, எதிர்காலக் குறிக்கோள்களுக்கு ஏற்றவகையில்தான் எமது தலைமைப்பீடம் தீர்மானத்தை எடுக்கும். பேச்சுவார்த்தைகளோ, இராணுவ செயற்பாடுகளோ எமது மக்களின் எதிர்காலத்தை தீர்மானிப்பதற்கு பக்கபலமாக இருக்கவேண்டும். அதைக் குழப்புகின்ற வகையில் எது அமைகின்றதோ அதை ஏற்றுக்கொண்டு எப்போதும் அதற்குள் எங்களை முடக்கிக்கொள்ள முடியாது.

இனிவரும் நாட்களில் மஹிந்த ராஜபக்ஷவுடன் பேசலமா இல்லையா எனபதை நாம் தீர்மானிக்க முடியாது. பேச்சைக் குழப்பி அந்நியப்பட்டு எந்த தரப்புச் செல்கின்றதோ அந்தத் தரப்புத்தான் அதற்கான முடிவை எடுக்கவேண்டும். ஆகவே மஹிந்த ராஜபக்ஷவிடம் தான் இந்தக் கேள்வியை நீங்கள் கேட்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டோறா படகு மீதான தாக்குதலில் மரணித்த கடற்படையினருக்கு ஜனாதிபதி இரங்கல்!

700 பேரைக் காப்பாற்றிய வீரர்கள் என்று புகழாரம்!

கடந்த வியாழக்கிழமை வெற்றிலைக்கேணி கடற்பரப்பில் டோறா படகு மூழ்கடிக்கப்பட்ட சம்பவத்தில் உயிரிழந்த கடற்படையினருக்கு ஜனாதிபதி தனது ஆழ்ந்த அனுதாபத்தையும் இரங்கலையும் தெரிவித்திருக்கிறார்.

700 கடற்படையினரின் உயிரைக் காப்பாற்றுவதற்காகப்போராடி மரணித்த வீரர்கள் அவர்கள் என்றும் அவர் புகழாரம் சூட்டியிருக்கிறார்.

இது தொடர்பாக ஜனாதிபதி செயலகம் விடுத்திருக்கின்ற அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

திருகோணமலை துறைமுகத்திலிருந்து காங்கேசன்துறை நோக்கி பாதுகாப்புப்படை உறுப்பினர்களை ஏற்றிக்கொண்டு பயணித்த கப்பல் மீதும், கடலின் பாதுகாப்பில் ஈடுபடுத்தப்பட்டிருந்த கடற்படையின் படகுகள்மீதும் எல்.ரி.ரி.ஈ. அமைப்பினரின் தற்கொலைப் பயங்கரவாதிகளால் ஒரேநேரத்தில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை முறியடிக்கும் நடவடிக்கையின்போது மரணத்தைத் தழுவிய கடற்படையின் அதிகாரிகள் மற்றும் வீரர்களுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது ஆழ்ந்த அனுதாபத்தையும், கவலையையும் தெரிவித்துள்ளார்.

போர்நிறுத்த உடன்படிக்கையைக் கடுமையான முறையில் மீறும் வகையிலமைந்த எல்.ரி.ரி.ஈ. இயக்கத்தினர் மேற்கொண்ட ஒருதலைப்பட்ச தாக்குதலின் மூலம் பாதுகாப்புப் படையினரின் எழுநூறுக்கும் மேற்பட்ட துருப்பினரை ஒரே தடவையில் அழித்து, நாட்டை நெருக்கடியான நிலைமையொன்றுக்குள் தள்ளிவிடுவதே அவர்களின் எதிர்பார்ப்பாகும்.

ஸ்ரீ சம்புத்த ஜயந்தி வருடத்தின் ஆரம்ப தினமாக வெசாக் போயா தினத்தை அனுஷ்டிப்பதற்கு இந்நாட்டில் மட்டுமன்றி சர்வதேச ரீதியாகவும் வாழும் மக்கள் பெரும் எதிர்பார்ப்புகளுடன் இருந்துகொண்டிருந்த இவ்வாறான கட்டத்தில் எல்.ரி.ரி.ஈ. பயங்கரவாதிகள் மேற்கொண்ட குறித்த கீழ்த்தரமான நடவடிக்கை மூலம் இந்நாட்டு மக்கள் பெரும் மன அழுத்தமொன் றுக்கு உட்பட்டுள்ளனர். நாட்டில் இனவாத நிலைமையொன்றை ஏற்படுத்துவதே புலிகளின் எதிர்பார்ப்பாக இருந்தது.

பாதுகாப்புப் படையினர் எழுநூறு பேரின் உயிர்களைப் பாதுகாத்து, நாட்டினுள் நெருக்கடி நிலைமையொன்று ஏற்படவிருந்த ஆபத்தைத் தவிர்த்து, குறித்த தற்கொலைத் தாக்குதலை முறியடிப்பதற்கான நடவடிக்கையின் போது மரணத்தைத் தழுவிய கடற்படையினர் அனைவருக்கும், பாதுகாப்புப் படையினருக்கும், என்னுடையவும், இந்நாட்டின் ஜனநாயகம் மற்றும் சமாதானத்தை மதிக்கின்ற, வடக்கு - தெற்கில் வாழும் அனைத்து மக்களினதும், நாட்டினதும் முழுமையான மரியாதை உரித்தாகின்றது.

தாக்குதலின்போது இறப்பைத் தழுவியவர்களின் குடும்ப அங்கத்தவர்களுக்கும் மற்றும் உறவினர், நண்பர்களுக்கும் ஜனாதிபதி தனது ஆழ்ந்த சோகத்தையும், மனவருத்தத்தையும் தெரிவித்துக்கொள்வதுடன், காயமடைந்திருக்கும் அனைவரும் விரைவில் குணமடையவும் பிரார்த்திக்கின்றார். - என்று அதில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

பிரமுகர்களுக்கு குண்டு துளைக்காதகார்

கொழும்பு, மே 14

கொழும்பிலுள்ள இராணுவத் தலைமையகத்தில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலையடுத்து அரசியல் மற்றும் இராணுவத் தரப்பைச் சேர்ந்த முக்கிய பிரமுகர்களுக்கு குண்டு துளைக்காத கார்களை வழங்குவதற்கு அரசு முடிவுசெய்துள்ளதாகத் தெரியவருகிறது.

குண்டு துளைக்காத கார்களை ஜேர்மன் நிறுவனம் ஒன்றிலிருந்து பெறுவதற்கான ஏற்பாடுகளை அரசு மேற்கொண்டுவருகிறது. இதற்காக 12 கோடி ரூபா ஒதுக்கப்பட்டிருக்கிறது என்றும் தெரியவருகிறது.

இதேவேளை, இரண்டு கார்களை இலங்கையிலுள்ள 'டிமோ' நிறுவனத்தின்மூலம் பெறுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஏனைய கார்கள் இன்று ஞாயிற்றுக்கிழமை ஜேர்மன் 'கார்க்கோ' மூலம் கொண்டுவரப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது.(க)

31ம் நாள் நினைவலைகளும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையும்

தோற்றம் 07-11-1944 மறைவு 15-04-2006

செல்வி அமரர்

பாக்கியரத்தினம் இராமலிங்கம்

(ஓய்வுபெற்ற உப அதிபர், யா/ இணுவில் இந்துக்கல்லூரி) B.A.Dip in.Ed

பெண்ணுக் கணிகலமே பேரழகுக் கோருருவே
கண்ணுக் கணியே கமலத்தாள் செந்திருவே
மண்ணில்புகழ்படைத்தாய் மாணவர்க்கு மாண்புரைத்தாய்
எண்ணித் துணிந்தோர் எமைவிட்டுப் போயினையே.

வடக்குவீதி, இணுவில் மேற்கு, இணுவில்.

தங்கள் மீளாப்பிரிவில் துயருற்றிருக்கும் குடும்பத்தவர்கள்.

விற்பனைக்கு

வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பாவித்த 29", 27" T.V.க்கள் (Sony, Panasonic, Philips விற்பனைக்குண்டு.

தொடர்பு:

மதன் ஏஜென்ட்

121, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

தொ.பே.: 021 222 2961 (50135)

இறுதிக் கிரியைகள் பற்றிய அறிவிப்பு

அமரர் துரைச்சாமி ரவீந்திரன் (ரவி)

10-02-2006இல் காலமான பருத்தித்துறை சிவன் கோவிலடியை பிறப்பிடமாகவும், லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. துரைச்சாமி ரவீந்திரன் (ரவி) அவர்களின் அந்திமக்கிரிகைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை 14-05-2006 காலை 11.00 மணி தொடக்கம் 12.30 வரை The Funeral Centre, 43-47 Rushey Green Cat Ford, London, St64 AS என்னும் இடத்தில் நடைபெற்று அதன்பின்பு 1.00 மணியளவில் Lewisham Crematorium, Verdon.Lane SE6 1TP என்னும் இடத்தில் தகனக்கிரியைகளும் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர்,நண்பர்கள் மற்றும் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல் : திருமதி. ரவீந்திரன் மற்றும் பிள்ளைகள் லண்டன்.

தாதிகள் தேவை

பழக விரும்புவர்களும் விண்ணப்பிக்லாம். யாழ். மாநகர சபைக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது. (50211)

தொடர்பு: விளம்பர இல. 2869 மே/பா உதயன், யாழ்ப்பாணம்.

திருமண சேவை

சிறந்த சேவை, குறைந்த கூலி இதுவே வேல் அமுதனின் இலட்சியம்! வேலமுதனின் திருமண சேவையில் பயனடைய விளைவோர் தராதர விபரக்கண்டக்க தெரிவு முறைமுன்னோடி புகழ் பூத்த முத்த திருமண ஆற்றுப்படுத்துநர் குரும்பசிட்டி மாயவேலவேல் அமுதனுடன் திங்கள், புதன், வெள்ளி நாள்களில் மாத்திரம் மாலை 4.30 மணிக்கு மேல் தொடர்புகொள்ளவும். தேரில் நேரில் அல்லது உங்கள் பிரதிநிதி சந்தித்தல் மிகமுக்கியம். (C/49272)

தொலைபேசி:- 23604888, 4514396, 0602158062

அறிவித்தல்

01.02.2006ஆம் திகதி உடைந்த இரும்புகளை விற்பனைசெய்ய கூறு விலைகள் கோரப்பட்டிருந்தது. மேலும் 28.02.2006ஆம் திகதி அதனை ஒத்தி வைப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. ஆயினும் தற்போது தவிர்க்கமுடியாத காரணத்தினால் விற்பனை இரத்துச் செய்யப்பட்டுள்ளது என்பதனை அறியத்தருகின்றோம்.

ஸ்ரீலங்கா போக்குவரத்து முகாமையாளர், நோர்த்மீ லிமிடெட்.

மரண அறிவித்தல்கள்

தம்பையா சுப்பிரமணியம்

(சவாரிச் சுப்பண்ணை)

மாவிட்டபுரத்தை பிறப்பிடமாகவும் சங்கானை சித்தன்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா சுப்பிரமணியம் அவர்கள் நேற்றுமுன்தினம் (12-05-2006) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பையா - வள்ளிப்பிள்ளை தம்பதியினரின் பாசமிகு மகனும் கொட்டைக்காட்டைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு.திருமதி கணபதிப்பிள்ளை - மனோன்மணி தம்பதியரின் அன்பு மருமகனும்புஸ்பதேவியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற பரந்தாமன் மற்றும் சாந்தகுமார் (U.K) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுபாசினி (U.K) யின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான சுந்தரமூர்த்தி (காட்டு இலாகா உத்தியோகத்தர்), நடராசா (மாவட்ட விளையாட்டு அதிகாரி) மற்றும் இராசரத்தினம் (ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர் ப.அ.ச.) தங்கராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற நாகலிங்கம் (C.T.B.) மற்றும் முருகேசபிள்ளை, சுந்தரமூர்த்தி (இளைப்பாறிய விற்பனையாளர் (M.P.C.S.), சுந்தரலிங்கம் (இளைப்பாறிய அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் N.S.B.), திருஞானசம்பந்தர் (இளைப்பாறிய விற்பனையாளர் M.P.C.S.), ஆகியோரின் மைத்துனரும் ஜெகசோதி (ஓய்வுபெற்ற சிறைச்சாலை உத்தியோகத்தர்), லோகநாயகி ஆகியோரின் சம்பந்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14-05-2006) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பி.ப. 2 மணிக்கு பூதவுடல் வழுக்கையாறு இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பிள்ளையார் கோயிலடி, சித்தன்கேணி. (C/49271)

தகவல்: மனைவி.

திருமதி இராமுப்பிள்ளை சரஸ்வதி

(தன்னை, களபூமி, காரைநகர்)

தன்னை, களபூமி, காரைநகரைப்பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராமுப்பிள்ளை சரஸ்வதி அவர்கள் நேற்று (13.05.2006) சனிக்கிழமை அதிகாலை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை பாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும் சண்முகம் இராமுப்பிள்ளை (முருகேசு) அவர்களின் பாசமிகு மனைவியும் நடராசா, இந்திராதேவி, பாலசுப்பிரமணியம், இராசேஸ்வரி, இராசபூபதி, மகேஸ்வரி ஆகியோரின் பாசமிகு தாயும் புவனேஸ்வரி, பாலேந்திரம், சுவீதா, சேதுகாவலர், கனகலிங்கம், சம்மந்தர் ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.05.2006) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு சுழிபுரம் சந்தி அருகில் நெல்லியான் வீதி இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் காரைநகர் களபூமி தில்லை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுழிபுரம் மேற்கு, சுழிபுரம். (50206)

தகவல்: ச.இராமுப்பிள்ளை(கணவர்), இ.நடராசா, இ.பாலசுப்பிரமணியம் (பிள்ளைகள்).

சின்னத்துரை சிவஞானம் (ஞானம்)

(கரிஸ் சலூன், விஷ்ணு லொறி உரிமையாளர்)

பாரதி வீதி, கம்பர்மலை, வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் தம்பாலை, அச்சுவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை சிவஞானம் அவர்கள் நேற்று முன்தினம் (12.05.2006) வெள்ளிக்கிழமை அகாலமரணமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.05.2006) திங்கட்கிழமைமு.ப. 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தம்பாலை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தம்பாலை, அச்சுவேலி. (50198)

தகவல்: குடும்பத்தினர்.

திருமதி முருகேசு வள்ளிப்பிள்ளை

நயினாதீவு, 3 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த முருகேசு வள்ளிப்பிள்ளை அவர்கள் நேற்றுமுன்தினம் (12.05.2006) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசுவின் (குட்டியாபிள்ளை) அன்பு மனைவியும் தணிகாசலம் (கனடா), காசிநாதன், துரைரெத்தினம், நாகலெட்சுமி, மகேஸ்வரன் (சுவிஸ்), தேவராசா(ப.நோ.கூ.ச.), வசந்தராசா (கனடா), விஜயலெட்சுமி (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயும் வாமதாசன் (மின்சாரசபை), குணரெத்தினம் (கனடா), ஜெகதீஸ்வரி (உதவி அரச பணிமனை), விஜயலெட்சுமி, சிவகாமசுந்தரி (கனடா), ஜெயலட்சுமி (சுவிஸ்), கலாநந்தி (ஆசிரியை) ஆகியோரின் பாசமிகு மாமியும் பிரணவன், அகிலா, துஜீபா, காலஞ்சென்ற கிரித்திகா, பதீசன், வேணுஜா, தணிகைக்குமரன், காலஞ்சென்ற சங்கரதாசன், முரளிதாசன், திரியம்பிகை, ரூபதாசன், பிரியந், ஜெகதாயினி, பிரண்டன், நிலானி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் இன்று (14-05-2006) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11 மணியளவில் நயினாதீவு சல்லிப் பரவை மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

ஸ்ரீ அம்பிகை, நயினாதீவு-3
தொ.பே.: 0602213429
0602212995. (50213)

தகவல்: மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேற்றுமுன்தினம் தீக்கிரையாக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரனின் குறைகேள் மற்றும் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை அலுவலகம் ஆகியவற்றையும் யாழ். மாநகராட்சி தீயணைப்புப் படையினர் தீயணைக்கும் பணியில் ஈடுபட்டிருப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்: நேசன்)

பணிப்புறக்கணிப்புக்கு பழி தீர்க்கவே அலுவலகங்கள் கொளுத்தப்பட்டன

நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் எம்.பி. அறிக்கை

யாழ்ப்பாணம்,மே14

பணிப்புறக்கணிப்பிற்குப் பழி தீர்க்கவே எனது பணிமனையும் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையும் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செ. கஜேந்திரன்.

நேற்றுமுன்தினம் அவரது அலுவலகமும் மாணவர் பேரவை அலுவலகமும் தீக்கிரையாக்கப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து வெளியிட்ட அறிக்கையிலேயே இதனை அவர் குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

பரமேஸ்வராச் சந்தியில் உள்ள இரண்டு மாடிக் கட்டடத்தில் நாடாளுமன்ற உறுப்பினராகிய எனது அலுவலகமும் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை அலுவலகமும் இயங்கி வருகின்றன. இக்கட்டடத்துக்குள் நேற்றுமுன்தினம் புகுந்த படையினர் அங்கிருந்த பெறுமதிமிக்க கணனிகளையும் தளபாடங்களையும் அடித்து நொறுக்கி தீயிட்டு எரித்து அழித்துள்ளனர்.

குடாநாட்டில் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படவேண்டும் எனக்கோரி குடாநாட்டிலுள்ள அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனப் பணியாளர்கள், அதிகாரிகள் அனைவரும் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் அரசு பெரும் நெருக்கடியைச் சந்தித்துள்ளது. அதேவேளை அரசும், அதன் படைகளும் பெரும் அவமானத்தினைச் சந்தித்து வருகின்றன.

குடாநாட்டில் வாழ்ந்த நூற்றுக் கணக்கான தமிழ் தேசிய ஆதரவாளர்களை சுட்டுப் படுகொலை செய்துள்ள படைத்தரப்பு விடுதலைப் புலிகளின் அரசியல் போராளிகள் அவர் களது அரசியல் பணிகளைச் செய்ய விடாது தடுத்து வெளியேற்றியுள்ள நிலையில் யாழ்.குடாநாடு தமது முழுமையான கட்டுப்பாட்டில் உள்ளதாக தம்பட்டம் அடித்துக் கொள்கிறது. அதனால் பணிப்புறக் கணிப்பை நிறுத்த பெரும் பகீரதப் பிரயத்தனம் செய்து வருகின்றது. அதன் பிரகாரம் அரச அரச சார் பற்ற நிறுவன அதிகாரிகளை தனியாகவும் கூட்டாகவும் சந்தித்து மிரட்டல் விடுத்தும் கூட பணிப்புறக்கணிப்பை முடிவுக்குக் கொண்டுவர முடியவில்லை.

இந்த அவமானத்தினை தாங்கமுடியாத படையினர் பணிப்புறக்கணிப்பை ஏற்பாடு செய்தவர்கள் நாம் என்கின்ற நினைப்பில் - பழி தீர்க்கும் நோக்குடன் - இத்தாக்குதலை மேற்கொண்டுள்ளன. சிறீலங்காப் படைகளின் காட்டுமிராண்டித் தனமாக இத்தாக்குதலை மிக வன்மையாகக் கண்டிக்கின்றேன். இவ்வாறான கோழைத்தனமாக தாக்குதல்கள் மூலம் எம்மையோ எமது மக்களையோ பணியவைக்கமுடியாது. படைகளின் அரச பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு, எம்மண்ணில் இருந்து அவர்கள் விரட்டியடிக்கப்படும் வரை மக்களோடு சேர்ந்து போராடிக்கொண்டே இருப்போம்.

- என்று நாடாளுமன்ற உறுப்பினர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இந்த அறிக்கையின் பிரதிகள் ஜனாதிபதி, இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் மற்றும் வெளிநாடுகளின் தூதுவர்கள் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்றும் அவர் மேலும் கூறினார்.

சந்தேகத்தில் இரு சிறுவர்கள் கண்டியில் கைது!

கொழும்பு, மே14

கண்டி ரயில் நிலையத்தில் சந்தேகத்துக்குரிய வகையில் நடமாடினர் என்று கூறப்படும் இரு சிறுவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடம் தலா 4 ஆயிரம் ரூபா பணமும் செல்போன்கள் உள்ளிட்ட ஆடம்பரப்பொருள்களும் இருந்துள்ளன.

ஹற்றனிலிருந்து கொழும்பு செல்வதற்கான பயணச்சீட்டுகளையும் அவர்கள் வைத்திருந்தனர். இருவரும் 12 வயது முதல் 13 வயதுக்குட்பட்டவர்கள்.

இருவர் மீதும் சந்தேகமடைந்த பொலீஸார் மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

கொழும்பு - வவுனியா இரவு ரயிலில் கொள்ளையர்கள் ஆறுபேர் சிக்கினர்

அநுராதபுரம், மே14

கடந்த புதன்கிழமை இரவு 10 மணிக்கு கொழும்பு கோட்டைப் புகையிரத நிலையத்திலிருந்து வவுனியா நோக்கிப் புறப்பட்ட தபால் புகையிரதத்தில் கொள்ளையிடும் நோக்கில் பயணித்தவர்கள் என்று சந்தேகிக்கப்படும் ஆறுபேர் புகையிரதப் பாதுகாப்புப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர். அவர்கள் அநுராதபுரம் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை அதிகாலை சுமார் 2.30 மணியளவில் இந்தப் புகையிரதம் தலாவ புகையிரத நிலையத்தில் நிறுத்துவதற்காக வேகம் குறைக்கப்பட்டது. அப்போது அதில் பயணித்த இருவர் பயணியொருவரின் பணப்பையைப் பறித்துக் கொண்டு புகையிரதத்திலிருந்து வெளியே குதிப்பதற்கு முயற்சித்தனர். அப்புகையிரதப் பெட்டியில் பயணித்த சிவில் உடையில் இருந்த பொலீஸ் அதிகாரி ஒருவர் அவர்களை பிடிப்பதற்கு முயற்சித்தார். அப்போது கைகலப்பு ஏற்பட்டது.

இதைக்கண்ட புகையிரதப் பாதுகாப்பு பொலீஸ் இருவர், பொலீஸ் அதிகாரியின் உதவியோடு கொள்ளையர்கள் இருவரையும் கைது செய்தனர்.

அக்கொள்ளையர்கள் அளித்த தகவல்களை அடுத்து அப்புகையிரதத்தில் பயணித்த மேலும் நான்கு கொள்ளையர்களையும் புகையிரதப் பாதுகாப்புப் பொலீஸார் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட ஆறுபேரும், தொம்பே இந்தொலமுல்ல மற்றும் பலஹெல பிரதேசங்களைச் சேர்ந்தவர்களென்பது தெரியவந்துள்ளது.

அக்கொள்ளையருள் ஒருவர் கையில் அணிந்திருந்த கைக்கடிகாரம், இருவாரங்களுக்கு முன்னர், இரவுப் புகையிரதத்தின் உணவுச் சாலையில் பணிபுரியும் ஊழியர் ஒருவரிடமிருந்து அபகரிக்கப்பட்டமையும் தெரியவந்துள்ளது. குறிப்பிட்ட ஊழியர் அக்கடிகாரத்தை அடையாளம் காட்டியுள்ளார்

இக்கொள்ளையர்கள் ஆறுபேரும் மேலதிக விசாரணைகளுக்காக அநுராதபுரம் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்று புகையிரதப் பாதுகாப்புப் பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

(206)

தமிழ்க்கட்சி முன்னாள் உறுப்பினர் மட்டக்களப்பில் சுட்டுக்கொலை!

மட்டக்களப்பு, மே14

மட்டக்களப்பு, பெரியநீலாவணையில் தமிழ்க்கட்சி ஒன்றின் முன்னாள் உறுப்பினர் என்று கூறப்படும் ஒருவரை விசேட அதிரடிப்படையினர் சுட்டுக்கொன்றனர்.

நேற்றுமுன்தினமிரவு 8.30 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பெரியநீலாவணையைச் சேர்ந்த நிரஞ்சன் என்பவரே கொல்லப்பட்டவர் என்று இணையத்தளச் செய்தியொன்றில் குறிப்பிடப்பட்டிருந்தது.

தமிழ்க்குழு ஒன்றில் உறுப்பினராக இருந்த இவர் அதிலிருந்து விலகி வெளிநாடு சென்றுவிட்டு சமீபத்தில் நாடு திரும்பியிருந்தார் என்றும் -

சம்பவத்தின்போது துப்பாக்கி ஒன்றுடன் சென்ற இவரை விசேட அதிரடிப்படையினர் தடுத்து விசாரணை நடத்தினர் என்றும் -

அப்போது ஏற்பட்ட வாக்குவாதத்தையடுத்து இவர் சுட்டுக் கொல்லப்பட்டார் என்றும் - கூறப்படுகிறது.

வேலணையில் துப்பாக்கிச் சூடு: தந்தையும், மகளும் படுகாயம்!

யாழ்ப்பாணம், மே14

வேலணை, மண்கும்பான் 5ஆம் வட்டாரத்தில் நேற்றுமுன்தினம் இரவு 11.30 மணியளவில் நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் தந்தையும் மகளும் காயமடைந்தனர்.

வீட்டின் சுற்று மதிலை ஏறிப்பாய்ந்து வந்த இனந்தெரியாத ஆயுததாரிகள் கதவைத் தட்டினர் என்றும்-

கதவைத் திறந்தவுடன் துப்பாக்கியால் சுட்டனர் என்றும்- கூறப்படுகிறது.

பி.சுந்தரலிங்கம் (வயது 56) அவரது மகளான சுந்தரலிங்கம் ஜெயராணி (வயது 29) ஆகியோரே இச்சம்பவத்தில் படுகாயமடைந்து யாழ். மருத்துவனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்படுள்ளனர். (15-78)

வீடுகள் விற்பனைக்கு

பாஷையூர் 2ஆம் குறுக்கு வீதியில் உள்ள 9ஆம் இலக்க வீடும், பாஷையூர் பீச்றோட்டில் அமைந்துள்ள 887/2 ஆம் இலக்க வீடும் விற்பனைக்குண்டு.

தொடர்பு: தொ.பே.0773618703, 0776672403.

(50214)

பரிசளிப்பு விழா ஒத்திவைப்பு

15.05.2006 திங்கட்கிழமை நடைபெறவிருந்த ஸ்ரீ காமாட்சி சன சமூக நிலைய சமய அறிவுப் போட்டிக்கான பரிசளிப்பு விழா தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டு எதிர்வரும் 21.05.2006 ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2 மணியளவில் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

ஸ்ரீ காமாட்சி ச.ச. நிலையம், நாச்சிமார் கோயிலடி. (50021) சனசமூக நிலைய நிர்வாகத்தினர்.

கலைவாணி சனசமூக நிலையத்தினால் நடத்தப்பட்ட அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பு முடிவுகள்

முதலாம் பரிசு - 0371, 2ஆம் பரிசு - 2313, 3ஆம் பரிசு - 0545

ஆறுதல் பரிசுகள்

1284, 1277, 0820, 2373, 1465, 1822, 1380, 2241, 1089, 0725

பரிசிற்குரியவர்கள் தங்கள் பரிசில்களை மேற்படி சனசமூக நிலையத்தில் பெற்றுக்கொள்ளவும்.

கலைவாணி ச.ச. நிலையம்,
(50216) காஞ்சிபுரம், மாதகல்.

நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்

மனிதக் குரங்கொன்றின் நெஞ்சை உருக்கும் கதை கொண்ட சாகசச் சித்திரம்
பீட்டர் ஜிட்சஸ்சனின்

கிங் - கொங் King Kong

தங்கத் தமிழ் மொழியில்

[பாடசாலை மாணவர்களுக்கு விசேட சலுகை]

காட்சி நேரம் : 10.30, 2.30, 6.30, 9.30

ராஜா யாழ்ப்பாணம்

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடு
பரத், மல்லிகா கபூர் நடித்த

அழகாய் இருக்கிறாய்

பயமாய் இருக்கிறது

10.30, 2.30, 6.30, 9.30 முற்பதிவு செய்துகொள்ளலாம்

நாகர்ஸ் சுன்னாகம்

இன்று முதல்

தனுஸ், சாயாசிங் நடித்த

திருட்டு திருட்டு

காட்சி நேரம் : 10.30, 2.30, 6.30, 9.30

மரண அறிவித்தல்

கதிரவேலு மகேஸ்வரி

புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும் கொட்டடி, யாழ்ப்பாணத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு மகேஸ்வரி அவர்கள் 12.05.2006 அன்று இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் அமரர்களான கார்த்திகேசு - பார்வதி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற கந்தையா கதிரவேலு அவர்களின் மனைவியும் இரத்தினம் நாகம்மா, கிருஷ்ணபிள்ளை, நாகராஜா பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் அருமைநாயகம், சிவராசா, காந்திதேவி, சுதாதம் (பாலு), தியாகராஜா ராஜேஸ்வரி ஆகியோரின் பாசமிகு தாயும் பத்மநாயகி, ஜெயமலர், மகாதேவா சந்திரா, சந்திரகலா (ஆசிரியை, கரம்பன் சண்முகநாதன் ம.வி.), பிரயோகநாதன் (கடை) ஆகியோரின் மாமியும், விஜிதா, சிவகணேசன் (ஆசிரியர், பூநகரி தமிழ்க் கலவன் பாடசாலை), சுஜாதா, திருமுருகன் விஜயபாரதி, சிவசித்திரா, சித்திரலேகா, சங்கீதா, ஜனனி, சுரேந்திரன் (அபி எலேக்ரோனிக்ஸ் நல்லூர்), ரஜனி, சுகந்தினி, சுபாகரன், பிரியதர்சினி, சிந்துஜா, சுபாசினி, சுஜீவா, சுஜீவன், தேனுஜன், யதுஷா ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.05.2006) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு இல. 6, வைரவர் கோயில் லேன், கொட்டடி எனும் இடத்தில் இறுதிக்கிரியைகள் இடம்பெற்று வில்லூண்டி இந்துமயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

இல.6, வைரவர் கோயில் லேன்,
கொட்டடி, யாழ்ப்பாணம். (50217)

தகவல்:
க.தியாகராஜா (மகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போராடிப்பெற்ற கடல் இறைமையை புலிகள் எவரிடமும் இழக்கமாட்டார்கள்

கடற்புலிகளின் சிறப்புத் தளபதி சூசை உறுதி

வலி.வடக்கு, மே14

போராடிப் பெற்ற கடல் இறைமையை எவரிடமும் இழக்க முடியாது என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

தமிழீழ கடல் சூழ்ந்த நாடு. எமது நாட்டை சிங்கள ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்டெடுப்பதற்காகத் தரையில் எவ்வாறு நாம் சமர் புரிந்தோமோ அவ்வாறுதான் கடலிலும் சமர் புரிந்தோம்.

எமது தாயக நிலத்தில் கணிசமான பகுதி எவ்வாறு எதிரிகளிடமிருந்து விடுக்கப்பட்டதோ அது போலவே கடற்பரப்பிலும் கணிசமான பகுதியை மீட்டெடுத்துள்ளோம். எனவே போராடிப் பெற்ற கடல் இறைமையை எவரிடமும் இழக்கமுடியாது.

இன்று வடபகுதிக் கடற்பரப்பில் நாகர்கோயிலிருந்து கொக்குத்தொடுவாய் வரையான நீண்ட தொடர் கடற்பரப்பு எமது ஆளுகைக்குள் இருக்கிறது.

இக்கடற்பரப்பில் பயிற்சியாயினும் சரி விநியோக நடவடிக்கைகள் ஆயினும் சரி எவரது தலையீடுமின்றி எம்மால் சுதந்திரமாக ஈடுபடமுடியும். அதனைத் தடுத்து நிறுத்த எவராவது முனைந்தால் அவர்களுக்கு எதிராக போர்தொடுக்க நாம் ஒருபோதும் தயங்கப்போவதில்லை.

எமது தாயகப் பகுதியில் எம்மை நாமே பாதுகாப்பதற்கு எத்தகைய படைக் கட்டுமானத்தைக் கொண்டிருக்கக்கூடிய உரிமையும் அதிகாரமும் எமக்கு இருக்கிறது.

இன்று இறைமையுள்ள ஒரு நாட்டின் கடலில் தேச அங்கீகாரம் பெறாத எந்த அமைப்பும் கடற்படையைக் கொண்டிருப்பதற்கு அனுமதிக்கமுடியாது என்று கூறுகின்றார்கள். அவர்களுக்கு நாம் எமது தேசத்தில் கொண்டிருக்கின்ற எந்தவொரு கட்டுமானங்களுக்கும் எமக்கு வெகுமதியாகத் தரப்படவில்லை. எல்லாமே நாம் போராடிப் பெறப்பட்டவை. அவ்வாறு போராடித்தான் கடற்கட்டுமானத்தையும் பெற்றோம்.

கடலில் நாம் இன்று கொண்டிருக்கின்ற எமது பலம் நாம் சுமார் ஒன்றரை தசாப்த காலமாக தீவிரமாகப் போராடிப் பெற்றது. 1,200 இற்கும் மேற்பட்ட போராளிகளினது உயிர்களை நாம் இதற்கு விலையாக செலுத்தியிருக்கின்றோம்.

போர் இடம்பெற்ற காலப் பகுதியில் கூட உலகின் எப்பகுதியோடும் நாம் நினைத்த மாத்திரத்தில் கடல் வழித்தொடர்பை ஏற்படுத்தக்கூடிய நிலையிலேயே இருந்தோம். அப்போதெல்லாம் எம்மை எவராலும் தடுத்து நிறுத்த முடியவில்லை. யுத்தகாலத்தில் செய்ய முடியாததை சமாதானம் என்ற போர்வையைப் பயன்படுத்தி மட்டும் எவ்வாறு அவர்கள் சாதிக்கமுயலமுடியும்? அதை நாம் எவ்வாறு அனுமதிக்கமுடியும்?

இந்தப் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்தாகிய பின்னர் கிழக்கு மாகாணத்திலுள்ள எமது பகுதிகளுக்கு கண்காணிப்புக் குழுவினரின் அங்கீகாரத்துடன் கூடிய கடற் பயணங்கள் இரண்டை நாம் மேற்கொண்டிருந்தோம். அப்போது கண்காணிப்புக் குழுத் தலைவர் எம்முடன் கைகுலுக்கிக்கொண்டு அந்தப் பயணத்தை தொடக்கி வைத்தார். இப்போது மட்டும் புதிய நிபந்தனைகள், வியாக்கியானங்கள் எங்கிருந்து புதிதாக முளையெடுக்கின்றனவோ தெரியவில்லை.

எதிர்வரும் காலங்களிலும் மீட்டெடுக்கப்பட்ட எமது பூரண அதிகார வரம்பிற்கு உட்பட்ட கடற்பரப்பில் எமது கடல் நடவடிக்கைகள் தொடரும். இடையூறுகள் விளைவிக்கப்பட்டால் பதில் நடவடிக்கைகளும் தொடரத்தான் போகின்றன் என்றார் கேணல் சூசை. (22)

காகிதத்தில்தான் ஒப்பந்தம் காப்பாற்றப்படுகிறது நடைமுறையில் உக்கிரமற்ற போர் நடக்கிறது!

கண்காணிப்புக் குழுத் தலைவர் கவலை

இருதரப்பு மோதல்களைத் தவிர்க்கும் பொருட்டு கைச்சாத்திடப்பட்ட போர்நிறுத்த ஒப்பந்தம் காகிதத்தில் காப்பற்றப்பட்டு வருகின்றபோதும் சிறிலங்கா அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் உக்கிரமற்ற ஒரு போர் நடைபெற்றுக்கொண்டுதான் இருக்கிறது என்று போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் உல்ப் ஹென்றிக்சன் தெரிவித்துள்ளார்.

ரொய்ட்டர் செய்தி நிறுவனத்துக்கு வழங்கிய நேர்காணலின்போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

சிறிலங்காவில் உக்கிரமற்ற தணிவான ஒரு போர் நடைபெற்றுக்கொண்டுதான் இருக்கிறது. அதனை போர் என்று சொல்வதில் தவறில்லை என்று அவர் கூறினார்.

வெற் றிலைக்கேணி தாக்குதல் சம்பவம் தொடர்பாக விடுதலைப் புலிகள் கண்காணிப்புக் குழுவுக்கு அனுப்பியுள்ள கடிதம் குறித்துக் கருத்துத் தெரிவிக்கையில் -

சிறிலங்கா கடற்படையினரின் கடற்கலங்களில் பயணம் செய்யவேண்டாம் என்று விடுதலைப் புலிகள் அனுப்பிய கடிதம் தொடர்பில் நான் எனது முடிவைத்தான் எடுப்பேன் அவர்கள் விடுத்துள்ள எச்சரிக்கை கடுமையானதோ இல்லையோ கடற்படை கப்பல்கள்மீதான அவர்களது தாக்குதல் அப்பட்டமான போர்நிறுத்த மீறல் என்று அவர் மேலும் கூறியுள்ளார்.

இதனிடையே வடக்கு, கிழக்கிலும் அதற்கு வெளியிலும் இடம்பெற்று வரும்தமிழ் மக்கள் மீதான படுகொலைச் சம்பவங்களில் சிறிலங்காப் படையினரின் பங்களிப்பு உள்ளதாக தாம் உணர்வதாகவும் கண்காணிப்புக் குழுத் தலைவர் தெரி வித்துள்ளார்.

மிதிவெடியில் சிக்கி ஒருவர் படுகாயம்

மிதிவெடியில் சிக்கிய ஒருவர் தனது இடதுகால் துண்டிக்கப்பட்ட நிலையில் யாழ். போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். நேற்று மாலை 5.30 மணியளவில் அளவெட்டிப் பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. சங்கரப்பிள்ளை விவேகானந்தா (வயது 58) என்பவரே மிதிவெடியில் சிக்கியவரென தெரிவிக்கப்படுகிறது.

யூனிவேர்சல் யா/ இந்து மகளிர் கல்லூரி அருகே	O/L DAY CLASS
விஞ்ஞானம்	கணிதம்
இரா. செல்வவடிவேல்	C.K.B.தயாளன்
தமிழ்	சமயம்
திரு.தமிழ்.மாறன்	திரு. மயூரன்
சமூ. கல்வி	ஆங்கிலம்
திரு. பார்த்தீபன்	பிரபல ஆசிரியர்
வரலாறு	வர்த்தகம்
S. பிரபா	திரு.வித்தி

ஆரம்பம் 15.05.2006 திங்கள் 8.a.m.
அனுமதிகள் முன்கூட்டியே பெற்றுக்கொள்ளவும்
A/L 2008, 2007 வகுப்புகள் ஆரம்பம்.

இன்று...

(முதலாம் பக்கம் தொடர்ச்சி)

படும் தொண்டு நிறுவனமாக சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை மீது தமது காட்டுமிராண்டித்தனத்தை காட்டி உள்ளனர்.

எனவே படையினரின் செயற்பாட்டைக் கண்டித்து இன்று இடம்பெறும் ஹர்த்தால் போராட்டத்திற்கு அனைவரையும் ஒத்து ழைக்குமாறு வேண்டுகின்றோம் - என்றுள்ளது. (22)

திருநெல்வேலியில்...

(முதலாம் பக்கம் தொடர்ச்சி)

செய்திகள் தெரிவித்தன.

நேற்றுமுன்தினம் எமது தாய் நிறுவனமான சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையை இராணுவம் தாக்கியது. இதனால் ஆத்திரமடைந்து அந்த நிறுவனத்துக்குச் சமீபமாக இத்தாக்குதலை மேற்கொண்டோம்.

கல்விச் சமூகம் மீது படையினரின் கெடுபிடிகள் தொடர்ந்தால் குடாநாட்டில் படையினருக்கு எதிரான தாக்குதல்களைத் தீவிரமாக்குவோம் - என்று அந்த அமைப்புத் தெரிவித்துள்ளதாக இணையத்தளச் செய்திகள் தெரிவித்தன.

மூதூரில் கைதான இளைஞர் விடுதலை

மூதூர் பொலிஸாரால் அண்மையில் விடுதலைப் புலி உறுப்பினர் எனச் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த கோபால் ஜனார்த்தனன் (வயது 20) மூதூர் நீதிவான் நீதிமன்ற நீதவான் மாணிக்கவாசகர் கணேசராஜாவினால் கடந்த செவ்வாயன்று விடுதலை செய்யப்பட்டார்.

நிலாவெளியைச் சேர்ந்த ஏழ்மையான குடும்பத்தைச் சேர்ந்த இவர் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டு மூதூர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தார். இவருக்கு எதிரான குற்றச்சாட்டு எதுவும் இருப்பின் உடனடியாக நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு நீதிவான் கட்டளையிட்டிருந்தார்.

இவர் மீது குற்றச்சாட்டுகள் எதுவும் இல்லை எனப் பொலிஸார் தெரிவித்ததைத் தொடர்ந்து இவர் விடுதலை செய்யப்பட்டார். (க)

மின்தாக்கி மரஆலை தொழிலாளி மரணம்

கொழும்பு, மே 14

மாத்தளைப் பிரதேசத்திலுள்ள மர ஆலையில் வேலை செய்த சுனிமல் தர்ஷன கருணாதிலக்க (வயது 27) என்பவர் கடந்த வியாழக்கிழமையன்று மின்சாரம் தாக்கி இறந்துள்ளார்.

மர ஆலையிலுள்ள மின்வாளில் ஏற்பட்ட மின் ஒழுக்குக் காரணமாகவே இவர் இறந்துள்ளார் என்று மாத்தளை மாவட்ட தள வைத்தியசாலை அதிகாரி தெரிவித்துள்ளார்.

மரணமானவர் மாத்தளை மணிக்கிண்ண பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்றும் மாத்த ளைப் பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மாத்தளைப் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.

(க-10)

இலங்கை....

(முதலாம் பக்கம் தொடர்ச்சி)

தமிழீழ விடுதலைப் புலிகளின் போராளிகள் உயிரிழந்துள்ளமை மற்றும் நிராயுத பாணிகளான கண்காணிப்புக் குழுவினரின் கடற்கலம் தாக்கப்பட்டவை ஆகியவை குறித்து வருத்தமடைகின்றோம்.

பாரிய யுத்த நிறுத்த மீறலான தமிழீழ விடுதலைப் புலிகளின் கடல்சார் நடவடிக்கைகள் கைவிடப்பட வேண்டும் என்று நோர்டிக் நாடுகளை உள்ளடக்கிய இலங்கை போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவினர் விலியுறுத்தியுள்ளனர். கண்காணிப்புக் குழுவினர் மீதான தாக்குதலை ஏற்கமுடியாது.

நோர்வே அரசாங்கத்தின் அனுசரணையுடனான அமைதிப் பேச்சுகளில் அனைத்துத் தரப்பினரும் பங்கேற்று அரசியல்வழி தீர் வுக்கு முன்வரவேண்டும் - இவ்வாறு கோபி அனான் தெரிவித்துள்ளார்.

கடலில்...

(முதலாம் பக்கம் தொடர்ச்சி)

மாதம் 15ஆம் திகதி வழங்க கண்காணிப்புக் குழு முன்வந்தது. ஆனால் அந்தப் பயணம் இறுதி நேரத்தில் இடம்பெறவில்லை. வடமராட்சி கிழக்குக் கடலில் கடந்த வியாழக்கிழமை கடற்படையினரின் கப்பல் ஒன்றுக்கு யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் வழித்துணை வழங்கியிருந்தனர்.

இதையடுத்து கடற்படையினரின் கடற்கலங்களில் கண்காணிப்பாளர்கள் பயணிக்க வேண்டாம் என விடுதலைப் புலிகள் கண்காணிப்புக் குழவின் தலைவருக்கு எழுதிய கடிதத்தில் கோரியிருந்தனர்.

இது தொடர்பாக ஊடகவியலாளர்கள் கண்காணிப்புக் குழுவின் பதில் பேச்சாளர் றொபேட் நில்சனிடம் கேட்டபோது, கண்காணிப்புக் குழுப் பிரதிநிதிகளின் பாதுகாப்புக் கருதியே கடல் கண்காணிப்புப் பணிகளை தற்காலிகமாக நிறுத்துவது என கண்காணிப்புக் குழு முடிவு செய்துள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார்.

இந்த முடிவு அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்யமுடியவில்லை. (22)

கஜேந்திரன்...

(முதலாம் பக்கம் தொடர்ச்சி)

நகல் சாதனங்கள், கணனிகள், தளபாடங்கள் உட்பட அங்கிருந்த பொருள்களை உடைத்துச் சேதமாக்கினர் என்றும் -

பின்னர் பெற்றோல் குண்டுகளை வீசிக் கட்டடத்தைக் கொளுத்திவிட்டு சென்றனர். என்றும் - கூறப்படுகிறது.

நேற்றுக்காலை அங்கு சென்று பார்வையிட்ட யாழ்.பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி யாழ். மாநகராட்சிக்குச் சென்று தீயணைக் கும் படையினரை அழைத்துவந்தார். அவர்கள் வந்து கட்டடத்தில் எரிந்துகொண்டிருந்த தீயை அணைத்தனர்.

தீவைப்புச் சம்பவத்துக்கு படையினரே காரணம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரனும் மாணவர் பேரவையினரும் குற்றஞ்சாட்டியுள்ளனர். ஏற்கனவே பல தடைவைகள் இக்கட்டடம் படையினரின் தாக்குதக்கு இலக்கானதாகவும் அவர்கள் கூறியுள்ளனர். ஆனால் தீவைப்புக்கும் தமக்கும் தொடர்பில்லை என்று படைத்தரப்பு தெரவித்துள்ளது. (86-111)(22)

மரண அறிவித்தல்

சிதம்பரி கிருஷ்ணசாமி (கிட்டு)

(நெல்சந்தைப்படுத்தல் சபை முன்னாள் ஊழியர் - வவுனியா)

இளவாலை, காடியவளையைப் பிறப்பிடமாகவும் மல்வம், உடுவிலை தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட சிதம்பரி கிருஷ்ணசாமி 13.05.2006 சனிக்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் அமுதாவின் அன்புக் கணவரும் யனா, ஐங்கரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெயந்தகுமாரின் மாமனும் சுப்பிரமணியம் (தபாலதிபர், அளவெட்டி), வேலாயுதம் (சுவிஸ்), தெய்வேந்திரம் (சுவிஸ்), இலங்கநாயகி, சரஸ்வதி அம்மா (கனடா), தேவதி, மல்லிகாதேவி (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.05.2006) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மல்வம், உடுவிலில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:
உடுவில். ஐங்கரன் (மகன்).

EXPOAIR
your friend in the skies...
எக்ஸ்போ ஏயார்
வானத்தில் உங்கள் நண்பன்...

யாழ் – கொழும்பு
விமான பயணத்திற்கு அழையுங்கள்:
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 349999/ 8888
கொழும்பில் - 011 2372952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360290/ 91
Email- jaffna@expoavi.com, reservations@expoavi.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 14.05.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org